பருவவெளியீட்டுப்பகுதி
யாழ்ப்பாண பொதுநூலகம்

விலை ரூபா 1-25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 சித்திரை 6 ஷஃபா 9 இதழ் 67

யாழ்ப்பாணம் சனிக்கிழமை 19-4-1986

## இலங்கை புதிய யோசனைகள்:
# பார்த்தசாரதி, பண்டாரி, வெங்கடேஸ் ஆலோசனையில்!

[கொழும்பு]

இலங்கை இனப்பிரச்னை தீர்வு குறித்து ஜனாதிபதி ஜெயவர்த்தனாவினால். வெளி நாட்டமைச்சர் ஜனாப் ஹமீத் மூலம், இந்தியப்பிரதமரிடம் கையளிக்கப்பட்ட ஆலோசனைகள் தற்போது மூவர்கொண்ட விஷேச குழுவினால் தீவிர ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளதாகப் புதுடில்லி வட்டாரங்கள தெரிவிக்கின்றன.

இந்திய வெளியுறவு கொள்கைக் கமிட்டியின் தலைவர் திரு. ஜி பார்த்தசாரதி, இந்திய வெளியுறவுச் செயலர் திரு ஏ. பி வெங்கடேசுவரன், இந்தியகாங்கிரஸ்கட்சிவெளியுறவுத் தலைவர் திரு. பண்டாரி ஆகியோரே இனப்பிரச்னை தீர்வு குறித்து இலங்கை அரசதரப்பில் முன்வைத்த ஆலோசனைகளை ஆராய்ந்து வருகிறார்கள்.

தேவைஏற்படும்போது கலந்துரையாடும் விதத்தில் ஜனப்

[5ம் பக்கம் பார்க்க]

### மொரவெவவில் விமானப்படை மீது கண்ணிவெடி!

# 3 கோப்ரல்கள் உட்பட ஒன்பது பேர் மரணம்!

## 12பேர் காயத்துடன் அனுமதி

(திருமலையிலிருந்து நமது நிருபர்)

**திருகோணமலைப்பகுதியில் நேற்றுக்காலை இடம்பெற்ற கண்ணிவெடித் தாக்குதலில் இலங்கை விமானப்படையின் மூன்று கோப்ரல்கள், நான்கு தொழில்நுட்பவியலாளர்கள் உட்பட ஏழு வீரர்களும், இருவேறு நபர்களும் கொல்லப்பட்டனர். திருகோணமலை அநுராதபுரம் வீதியிலுள்ள மொரவெவ என்ற இடத்தில் நேற்றுக் காலை 6-30மணியளவில் இச்சம்பவம்நிகழ்ந்தது. இதில் 12 பேர் படுகாயமடைந்துள்ளனர்.**

மொரவெவ என்றகிராமத்தில் உள்ள விமானப்படை முகாமிலிருந்து கட்டுநாயக்காவுக்கு ஜீப்வண்டியிலும் ட்ரக் ஒன்றிலும் விமானப்படையினர் சென்று கொண்டிருந்த பொழுது இச்சம்பவம் நடைபெற்றது

கண்ணி வெடியில் சிக்கிய ட்ரக் எஞ்சின்சுமார்100மீற்றர் தூரத்துககுத்தூக்கிவீசப்பட்டதாகவும், பலியானவர்களின் சடலங்கள் சுமார் 200 மீற்றர் தூரத்தில் சிதறுண்டதாகவும் கூறப்படுகிறது. கண்ணிவெடிச் சத்தம் திருமலை நகரைக்கூட பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியதென தெரிவிக்கப்பட்டது.

அரச வட்டாரங்களின் தகவலின்படி, கண்ணிவெடிச் சம்பவத்தில் பலியான 9 பேரில் 7 பேர் விமானப்படையைச் சேர்ந்தவர்கள் என்றும் இருவர் பொதுமக்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தாக்குதல் சம்பவத்தில் சுமார் 12 பேர் வரை படுகாயமடைந்துள்ளனர். இவர்கள் உடனடியாக அநுராதபுரம் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது (க-மா)

## மூன்று கோப்ரல்கள், 4 தொழில்நுட்பவியலாளர்!

[கொழும்பு]

நேற்று மொரவெவவில் இடம்பெற்ற கண்ணி வெடித் தாக்குதலில் கொல்லப்பட்ட விமானப்படையைச் சேர்ந்த மூன்று கோப்ரல்களினதும் நான்கு விமானத் தொழில் நுட்பவியலாளர்களினதும் பெயர் விபரம் வருமாறு:

கோப்ரல்கள்:- ஆர். டி கொடாச்சி, என் எ. கே. லக்ஷ்மன், ஏ. ஜி. பியதாஸா.

விமான தொழில்நுட்பவியலாளர்கள் ஜே பி ஜி. பெர்னாண்டோ, பி எம். டி. ஆர். வீரசிங்க, எ கொரம்பேக், ஐ. எல். இந்திரசாந்த.

இந்த ஏழுபேர் தவிர இவர்களுடன் ட்ரக்கில் சென்ற வீர

[5ம் பக்கம் பார்க்க]

## 23 பேர் மரணம்! 'புலிகள்' அறிக்கை!

[யாழ்ப்பாணம்]

மொரவெவ விமானப்படை மீதானதாக்குதலுக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் உரிமைகோரியுள்ளது.

இதுகுறித்து அவ்வியக்கம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் 23 விமானப்படையினர் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கை விபரம் வருமாறு:

"திருகோணமலை மாவட்டத்தில் முதலிக்குளம் என்று முன்னர் அழைக்கப்பட்ட மொரவெவ என்ற கிராமத்தில் உள்ள விமானப்படை முகாமிலிருந்து திருயாயிற்கு நேற்று காலை 7 மணியளவில் விமானப்படையினர் வந்து

[5ம் பக்கம் பார்க்க]

## நேற்றிரவும் குண்டு வெடிப்பு!

[யாழ்ப்பாணம்]

யாழ் கோட்டைப் பகுதியிலிருந்து நேற்றிரவு 10-45மணியளவில் ஒளிப்பிழம்பு ஒன்று தோன்றி, வடக்கு நோக்கி நகர்ந்தது. அவ்வெளிச்சம் சிறிது நேரத்தில் மறைந்து விட்டது.

இதனைத் தொடர்ந்து அடுத்தடுத்து பலகுண்டுகள் வெடித்தன. துப்பாக்கிச்சூட்டுச் சத்தங்களும் கேட்டன. [மா]

## அதிரடி சப் இன்ஸ்பெக்டர் வெடிவிபத்தில் பலி!

[பொத்துவில்]

பொலிஸ் அதிரடிப்பிரிவைச் சேர்ந்த சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் வெடிவிபத்துக்குப் பலியானார்

நேற்றுமாலை பொத்துவில் நகரில் இச்சம்பவம் நடைபெற்றது.

அதிரடிப்பொலிஸ் பிரிவைச் சேர்ந்த சிலர் ஜீப்வண்டியில் ரோந்துசென்றுகொண்டிருந்தபோதும் திடீரென ஜீப்வண்டிக்குள் பலத்த சத்தத்துடன் வெடிச்சத்தம் கேட்டதைத் தொடர்ந்து அதிலிருந்த உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் மரணமடைந்ததாகவும் கூறப்படுகிறது ஜீப்வண்டியிலிருந்த மற்றவர்களின் நிலைபற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்திலிருந்து ஹெலிகொப்டர் வந்து பலியானவரை எடுத்துச்சென்றது. [மா]

## தொழிற் சங்க தடை நீக்கம்

(கொழும்பு)

தாதிமார் தொழிற்சங்கத்தின்மீது விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத் தாதியார் நேற்றையதினம் வேலைக்குத் திரும்பியதையடுத்து, அவர்களின் கோரிக்கையின்படி ஐக்கிய தாதிமார் தொழிற்சங்கத்தின் மீது விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டது

இதேவேளை தாதிமாரின் சம்பளக் கோரிக்கைகள் குறித்து எதிர்வரும் செவ்வாயன்று நடைபெறவுள்ள கூட்டத்தின் போது ஆராயப்படும். [பி]

## தாதிமார் தொழிற்சங்கம்-அமைச்சர்கள் சந்திப்பு!

[கொழும்பு]

கடந்த 30 தினங்களாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்து நேற்று முன்தினம் வேலைக்குத் திரும்பிய தாதிமார்களின் தொழிற்சங்கம் சுகாதார அமைச்சர் டாக்டர் ரஞ்சித் அத்தபத்து, மகளிர் விவகார அமைச்சர் திருமதி சுனித்ரா ரணசிங்கா ஆகியோரைச் சந்தித்தது.

இத்தாதிமார் தொழிற்சங்கம் அவசரகாலச் சட்டவிதி

[5ம் பக்கம் பார்க்க]

## வைத்திய அத்தாட்சி பெறுவதில் சிரமம்!

[யாழ்ப்பாணம்]

அரச, கூட்டுத்தாபனங்களின் உத்தியோகம் பெற்றுக் கொண்டவர்கள் வைத்திய அத்தாட்சி பெறுவதில் கஷ்டமுறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது (5-ம் பக்கம் பார்க்க)

### மனிதாபிமானமற்ற செயல்கள்:
## நேற்று பூரண ஹர்த்தால்!

(யாழ்ப்பாணம்)

மனிதாபிமானமற்ற செயல்களுக்கு எதிர்ப்புத்தெரிவித்து ஹர்த்தால் நடத்துமாறு யாழ் கொட்டடி மீனாட்சி சனசமூக நிலையத்தினரும் இணக்கசபையினரும் விடுத்த கோரிக்கையைத் தொடர்ந்து நேற்று யாழ். நகரில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

கடைகள் வர்த்தக நிலையங்களைப் பூட்டி, பஸ் சேவைகளை நிறுத்தி ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு யாழ் கொட்டடி ஸ்ரீ மீனாட்சி சனசமூக நிலையமும் இணக்கசபையும் சேர்ந்து கோரியிருந்தன.

நேற்றுக்காலை முதல் பஸ் நிலையபபகுதியில் தொடர்ச்சியாக பெரும் வெடிச்சத்தங்கள் கேட்டன கடைகள், வர்த்தகநிலையங்கள் யாவும் பூட்டப்பட்டிருந்தன.

யாழ். பஸ்நிலையம் வெறிச்சோடிக்காணப்பட்டது. வழக்கம்போல் மினிபஸ்கள் வ. போ. ச. பஸ்கள் யாவும் ஆரியகுளம் சந்தியில் தரித்துநின்றன, பிரயாணிகள் அவ்விடம் சென்று பஸ்களில் சென்றனர். (கி)

## பரவைக் கடலில் இரு அப்பாவி மீனவர் பலி!

(யாழ்ப்பாணம்)

பரவைக்கடலில் கரவலை வீசி மீன்பிடித்துக் கொண்டிருந்த இரு அப்பாவி மீனவர்கள் ஆயுதப்படையினரின் துப்பாக்கிச் சூட்டுச்குப் பலியானார்கள்

தொண்டமனாறு கடல்பகுதியில் இப்பரிதாப சம்பவம் இடம்பெற்றது.

அச்சுவேலி வளலாயைச் சேர்ந்தஅல்போன்ஸ்(26வயது) ஒருபிள்ளைக்குத் தந்தை, அல்பிரட் குணம் (37 வயது) இவருக்கு 4 பெண்பிள்ளைகள் உண்டு. ஆகிய இருவருமே துப்பாக்கிச் சூட்டுக்குப்பலியானவர்களாவர்.

நேற்றுமுன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)

## 'மிராஜ்' தந்த மார்ஷல் காலமானார்!

[ராய்ட்டர்]

'மிராஜ்'ஜெட்போர் விமானத்தைத் தயாரித்த சிற்பியும், நவீன பேர்விமானததொழிற்துறையின் தந்தையுமான மார்ஷல் டஸோல்ட் தமது 96 வயதில் நேற்றுக் காலமானார்.

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

அல்ஷேசன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. 58, சங்கிலியன் வீதி, நல்லூர். [C-1835]

பூரண விளைத்திறனுடைய பம்பாய் வெங்காய விதை விற்பனைக்குண்டு. பிள்ளையார் மெற்றல் வேக்ஸ், 257, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [C-1837]

வல்வெட்டித்துறை, ஆலடி ஒழுங்கையில் நிலப்பரப்பு 6 கொண்டதும் வீதியும் ஒழுங்கையும் கொண்டதுமான கருவத்தனை கலட்டி பூசித்தான்) ஆதனம் விற்பனைக்குண்டு. சு. பெ. மு. கனகசபாபதி, வியாபாரி மூலை, பருத்தித்துறை. [C-1836]

வெளிநாடு செல்பவரின் வீட்டுத் தளபாடங்கள் அல்மாரி, கட்டில்கள், மெத்தைகள், Dressing Table, குளிர்சாதனப் பெட்டி, Iron, Electric Cooker, Kenwood Chef, கிளாஸ் வகைகள், கசற் றேடியோ, மற்றும் பல. பத்மநாதன், ஆடியபாதம் றோட், (திருநெல்வேலிச் சந்திக்கும் மருத்துவக் கல்லூரிக்கும் இடையில்). [C-1834]

சாவகச்சேரி, சங்கத்தானை, இந்துக் கல்லூரிக்கும் புகையிரதத்தரிப்புக்கும், உபதபால் கந்தோருக்கும் மத்தியில்உள்ள 2 பரப்பு 6 குளி காணி விற்பனைக்குண்டு. சாரதா வீதி ஒரு பக்கமும், புகையிரதவீதி, கண்டி றோட் மறுபக்கமுமுள்ள மூலையில் இரண்டாவதாகவுள்ளது. தொடர்பு: (1) வ. தாமோதரம்பிள்ளை, சங்கத்தானை, சாவகச்சேரி. அல்லது (2) தா. சிவானந்தன், 460, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். [C-1827]

### மணப்பந்தல்

இந்து வேளாள தாரமிழந்த பிள்ளைகளற்ற பெண்ணிற்கு 35—40 வயதுக்குட்பட்ட மணமகன் தேவை. வெளிநாட்டவரும்விரும்பப்படுவர். வீடுவளவு நகை, ரொக்கம் கொடுக்கப்படும். விளம்பர இல.C-1814, C/o, ஈழநாடு, யாழ்ப்பாணம். [C-1814]

### தவறிவிட்டது

11-4-86 நாவற்குழிக்கும் நுணுவிலுக்கும் இடையில் இ. சந்திரகுமார் என்பவருடைய தேசிய அடையாள அட்டை இல. 610713700 தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் யாழ். ஆஸ்பத்திரிக்குமுன்னுல் சிக்மா பம்ப்ஸ் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். [C-1839]

இளையதம்பி சுப்பிரமணியம் என்பவருடைய தேசிய அடையாள அட்டையும், இலங்கை மின்சாரசபை பாஸ்புத்தகமும் சுன்ணுகத்தில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் சுன்ணுகம் கிழக்கு, சுன்ணுகம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். [C 1825]

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

---

நல்லூர். ப. நோ. கூ. சங்கம்

## கேள்வி கோரல்

### 24 ஸ்ரீ 9364

### இசுசு லொறி எஞ்ஜின் திருத்தி அமைத்தல்

மேற்படி லொறியின் என்ஜினை பூரணமாக திருத்தி அமைப்பதற்கு தகுதி வாய்ந்த கராஜ் உரிமையாளர்களிடமிருந்து கேள்வி கோரப்படுகின்றது. முழு விபரங்கட்கும் 30-04-86க்குமுன் சங்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

**பொதுமுகாமையாளர்,**
நல்லூர் ப. நோ கூ. சங்கம்,
திருநெல்வேலி

தொ. பேசி இல. 23646
(A 594)

---

நல்லூர் ப. நோ. கூ. சங்கம்

## பதவி வெற்றிடம்

### சிற்றுண்டிச்சாலை முகாமையாளர்

மேற்படி பதவிக்காக தகுதி வாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்பத்திரங்களை முழு விபரங்களுடன் சங்கக் காரியாலயத்தில் ரூபா 2/- செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

மேற்கொண்டு விபரங்களுக்கு பொதுமுகாமையாளர், நல்லூர் ப. நோ. கூ. சங்கம், திருநெல்வேலி என்ற முகவரியில் தொடர்புகொள்ளவும்.

விண்ணப்ப முடிவு திகதி: 26-04-86.

**பொதுமுகாமையாளர்**
நல்லூர் ப. நோ.கூ. சங்கம்,
திருநெல்வேலி.

தொ. பேசி இல' 23646
(A 593)

---

## மின்தடை

### இலங்கை மின்சார சபையின் முக்கிய அறிவித்தல்

1986-04-20ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அனுராதபுரத்தில் இருந்துவரும் 132 கே.வி. மின் மார்க்கத்தில் அவசர திருத்த வேலை காரணமாக காலை 6-00 மணி தொடக்கம் மாலை 5-00 மணி வரை யாழ். பிரதேச மின் பொறியியலாளரின் அதிகாரத்துக்குள் இருக்கும் யாழ்ப்பாணம், சுன்ணுகம், காங்கேசன்துறை, வட்டுக்கோட்டை, வேலணை ஆகிய பகுதிகளுக்கு மின்தடை ஏற்படுமென அறியத்தருகின்றேன்.

மேலும், கிளிநொச்சிப் பிரதேச மின் பொறியியலாளரின் அதிகாரத்துக்குள் இருக்கும் சகல பகுதிகளுக்கும் காலை 6-00 மணியிலிருந்து 6-30 மணி வரையும், மாலை 4-30 மணியிலிருந்து 5-00 மணி வரையும் மின்தடை ஏற்படுமென அறியத்தருகின்றேன்.

இம்மின்தடையால் பாதிப்படைய இருக்கும் சகல மின் நுகர்வோரிடமிருந்தும் அவர்களுக்கு ஏற்படும் வசதியீனங்களுக்காக இலங்கை மின்சார சபை தனது வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கின்றது.

இப்படிக்கு,
**மின் பொறியியலாளர்,**
யாழ். பிரதேச அலுவலகம்,
இலங்கை மின்சாரசபை,
சுன்ணுகம்.

[A 590]

---

## உபகரணங்கள் அன்பளிப்பு

(சாவகச்சேரி)

சர்வதேச சமாதான சேவை இயக்கத்தினர் மறவன்புலவு கெற்பெலி போன்ற அகதிகள் குடியேற்றத் திட்டங்களில் வசிக்கும் 5 பேருக்கு தச்சு வேலை உபகரணங்களை அண்மையில் அன்பளிப்புச் செய்துள்ளனர்.

இங்கிலாந்தில் இருக்கும் ஓர் சமூக சேவை ஸ்தாபனத்தால் இவ் உபகரணங்கள் சர்வதேச சமாதான சேவை இயக்கத்திற்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

---

## இன்று கலாசார விழா

(யாழ்ப்பாணம்)

கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக நிலையமும், இந் நிலையத்தின் கலாசாரக் குழுவும் இணைந்து நடாத்தும் கலாசார விழா இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

நிலையத்தலைவர் திரு. கே. துரைசிங்கம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் புரட்சிக் கவிஞர் புதுவை இரத்தினதுரை, இ அரசகேசரி, நல்லை அமிழ்தன், இ நா. யோகேந்திரலிங்கம் எஸ். சிவபாலன், மாத்தளை ராஜலிங்கம் ஆகியோர் பங்குபற்றும் ''என்று தணியும் இந்த சுதந்திர தாகம்'' என்ற தலைப்பில் கவியரங்கு நடைபெறும். நாடகங்கள், செல்வி அமுதா விஞசித்தம்பியின் பரத நாட்டியம் கலாசார குழுவின் ''இந்த மண்ணும் மக்களும்'' என்ற கதை நிகழ்வுடன் இன்னிசைக்கச்சேரிகளும் இடம்பெறும். (ஐ)

---

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

(இல. 84 அ—பிரிவுகள் 524, 532)

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற உடுவிலைச் சேர்ந்த செல்லப்பாரிச்சாட் இரத்தினசிங்கம் என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்,

-மரணமெய்தியவர்.

சி. ஆர். இரத்தினசிங்கம் கைம்பெண் றெசபெல்லா ராணிநாயகி, 'சுகந்த ஸ்தான்'', உடுவில்.

-மனுதார்.

மரணசாதன நியாயாதிக்கம் } இல. 266

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1986 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 23 ஆந் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்ருர்.

நீதிமன்றக் கட்டளைப்படி,

வி. இராமச்சந்திர ஐயர்,
பதிவாளருக்காக.

1986 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 20 ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

செல்வி
எஸ். அபிமன்னசிங்கம்,
சட்டத்தரணி,
சித்தாவத்தை,
உடுவில். (C 1824)

---

## தேவை

எமது அலுவலகத்தில் ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றக்கூடிய பகுதிநேர பயிண்டர் [BINDER] தேவை.

பயிண்டிங் தொழிலில் நன்கு தேர்ச்சியும் முன்னனுபவமுமுள்ளவர்கள் தமது விண்ணப்பத்தை 25-04-1986 ஆம் திகதிக்குமுன் எமக்குக் கிடைக்கக்கூடியதாக கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். விண்ணப்பத்தின் உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'பயிண்டர்' எனக் குறிப்பிடவும்.

முகவரி:
**நிர்வாகி,**
**'ஈழநாடு' லிமிட்டெட்,**
**தபால் பெட்டி எண் 49,**
**யாழ்ப்பாணம்.**

[A 595]

---

## பிரயாண ஒழுங்குகள்

★ இத்தாலி ★ பிரான்ஸ்
★ ஜேர்மனி ★ டென்மார்க்

ஆகிய நாடுகளுக்கு போவதற்கு பாஸ்போட் கொடுத்தவர்கள் இன்று எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

## லிப்ருஸ் லிமிற்ரெட்

R. G. கட்டடம்,
70, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

No. 60, Sea Beach Road,
Pettah.
Tele No. 29148

மேற்குறிப்பிட்ட நாடுகளுக்கு போக விரும்புவோரும் உடன் தொடர்பு கொள்ளவும்.

(A 449)

---

## முதலாம் ஆண்டு குருபூசைத்தினம்





| | |
|---|---|
| வீரசைவ குரு சிவஸ்ரீ | திருமதி |
| பொ. கந்தையாக்குருக்கள் | கனகம்மா அம்மையார் |
| (உரும்பராய் ஞான வைரவ சுவாமி கோயில் பிரதம குருக்களும், ஆதீன கர்த்தாவும்). | கந்தையாக்குருக்கள் |
| தோற்றம்: 05-01-1900 | தோற்றம்: 02-02-1906 |
| மறைவு: 02-12-1984 | மறைவு: 29-04-1985 |

யாழ்ப்பாணத்தில் தற்போது அருகிவரும் வீரசைவகுரு மரபிற்கு ஒரு கலங்கரை விளக்காக விளங்கிய குருவே! தங்கள் சம்புடத்திலும், பட்டுப்பையிலும், திருமேனியிலும் பொலிந்த திருநீறு, அடியார் உயிர்காத்து, வினையறுத்து இம்மையிலும் மறுமையிலும் வாழ்வளிக்கும் மருந்தாகும். திருநீற்றின் உண்மைத்தத்துவத்தினை உணர்ந்த-உணர்த்திய தங்களை நாம் சிவனின் தூதனுக உணர்கின்றோம். முன் ஆயத்தமாகத் தங்கள் பாதியை-பாரியை வீடு அனுப்பி ''தம்கருமம் செய்தீர்'', தாங்கள் சிவலிங்க ஐக்கிய நற்பேற்றை சக்தி ஒன்றிணைந்து இன்று வழிபட்டுப் பேறடைவோமாக!

19-04-1986-ல் அன்னரின் இல்லத்தில் குருபூசை நடைபெறும்.

அன்னர்களின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:

உற்ருர், உறவினர்கள்.

உரும்பராய்.

(C 1838)

## அமெரிக்கத் தாக்குதல்கள்:

# ஐ.நாவில் அமெரிக்கா மீது பல நாடுகள் கண்டனம்

[நியுயோர்க்]

லிபியாவின் தலைநகர்மீது அமெரிக்க விமானங்கள் மேற்கொண்ட தாக்குதல்கள் நேற்று முன்தினம் நடந்த ஐ நா பாதுகாப்புச் சபையின் விசேட கூட்டத்தில் பலத்த கண்டனத்திற்குள்ளாகின.

தற்போது மத்தியதரைக் கடலில் நிலைகொண்டுள்ள அமெரிக்காவின் 6வது கடற்படைப் பிரிவு விமானங்களும், பிரிட்டனிலுள்ள அமெரிக்க விமானங்களும் கடந்த செவ்வாயன்று லிபியத் தலைநகரைத் தாக்கியதும் இத்தாக்குதலில் சிறு குழந்தைகளுட்பட பலர் பலியானதும் தெரிந்ததே.

இதனை விவாதிப்பதற்காக ஐ.நா. பாதுகாப்புச்சபை கூடியது அப்போது சோவியத் யூனியன், சிரியா, கியூபா, சீனு, இந்தியா, உட்படப் பல நாடுகள் அமெரிக்காவை வன்மையாகக் கண்டித்தன. இவ்விவாதத்தின்போது பிரிட்டனும் பலத்த கண்டனத்திற்குள்ளாகியது.

இத்தாக்குதல்களைத் தொடர்ந்து பிரிட்டனிலுள்ள ராணுவத் தளங்கள், அரசாங்கஅலுவலகங்கள் ஆகியன எதிர்த் தாக்குதல்கள் குறித்து முழு அளவிலான எச்சரிக்கை நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

# அமெரிக்க விமானங்கள்

## கடுமையான எதிர்ப்புக்குள்ளாயின

### — அமெரிக்க கமாண்டர்

[வாஷிங்டன்]

கடந்த செவ்வாயன்று லிபியத் தலைநகரையும், பெங்காஸி நகரையும் தாக்கிய அமெரிக்க விமானங்கள் லிபிய தரப்பிலிருந்து மிகவும் கடுமையான ஏவுகணைத் தாக்குதல்களுக்குள்ளாகின எனத் தெரிவிக்கப்படுகிறது.

இத்தாக்குதல்களை மேற்கொண்ட அமெரிக்க 6வது கடற்படையின் கமாண்டரான வைஸ்அட்மிரல் பிராங்க் செல்லோ இதுபற்றிக் கூறுகையில், வியட்நாமிய யுத்தத்தின் பிறகு இத்தாக்குதலில்தான் தாம் இவ்வளவு கடுமையான எதிர்ப்பைச் சமாளிக்கவேண்டியிருந்தது என்றார்

லிபிய ராணுவத்தினர்,சோவியத், பிரெஞ்சு ரக விமான எதிர்ப்பு ஏவுகணைகளையும், பல்வேறு வகையான விமான எதிர்ப்புப் பீரங்கிகளையும் மிகவும் திறமையாக உபயோகித்தனர். [செ]

### 'கடத்தப்பட்ட' மார்க்கோஸை

# தாயகம் அனுப்பக்கோரி ஆதரவாளர் ஆர்ப்பாட்டம்!

[மணிலா]

தற்போது ஹவாய் தீவில் வசித்துவரும் முன்னுள் பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி திரு மார்க்கோஸ் மீண்டும் பிலிப்பைன்ஸுக்கு வர அனுமதிக்குமாறு கோரி சுமார் 500 மார்க்கோஸ் ஆதரவாளர்கள் மணிலாவில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தின் முன்னுல் ஆர்ப்பாட்டமொன்றை நடத்திஞர்கள்

''அமெரிக்கா மார்க்கோஸைக் கடத்திச் சென்றது'' என்று எழுதப்பட்ட சுலோக அட்டைகளுடன் காணப்பட்ட இவர்கள், பொல்லு, தடி போன்றவற்றைக் கையில் வைத்திருந்தனராம். இவர்களின் கருத்துப்படி, திரு மார்க்கோஸ் பிலிப்பைன்ஸை விட்டு வெளியேற விரும்பவில்லை. ஆயினும் பிலிப்பைன்ஸிலுள்ள அமெரிக்க ராணுவ அதிகாரி ஒருவரினுல் ஏமாற்றப்பட்டு விமானத்தினுள் ஏற்றப்பட்டாராம். [செ]

# ''உலகியலில் வாழ்பவர்கள் இறைவனை மறந்துவிடக்கூடாது''

## அந்தர்யோகத்தில் கருத்து

[யாழ்ப்பாணம்]

''மானிடப்பிறவியின் நோக்கம் கடவுளையடைவதே. உலகியலில் வாழ்பவர்கள் இறைவனை மறந்துவிடக் கூடாது. அவர்கள் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் கூறியதுபோன்று ஒருகையால் இறைவனைப் பற்றிய படியே மறுகையால் கடமையைச் செய்ய வேண்டும் கடமையற்றுப் போகின்றபோது இருகைகளாலும்இறைவனைப் பற்றிக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு பருத்தித்துறை ஸ்ரீ ராம கிருஷ்ண சாரதா சேவாச்சிரமத் தலைவர் ஸ்ரீமத் சுவாமி சித் ரூபானந்தா திருநெல்வேலி ராம கிருஷ்ணலயத்தில் நடைபெற்ற அந்தர் யோகத்தில் உரையாற்றுகையில் கூறிஞர்.

ஸ்ரீமத் சுவாமி தொடர்ந்து உரையாற்றுகையில்'' ஒருவன் தன்னைப்பற்றி அகங்காரம் கொள்வது வீண் இந்த உடல் செல்வம் என்பன நிலையற்றன ஆத்மாவே நிஜமானது. தானங்களிற் சிறந்த தானமாகிய ஆத்மீகத்தை குருவே எமக்கு வழங்கி எம்மை மோட்சநிலைக்கு அழைத்துச் செல்வதினுல் குருபக்தி இன்றியமையாதது என்றுர்.

உரையைத் தொடர்ந்து தியானம் மௌனம் பஜனை கேள்வி பதில் நிகழ்ச்சிகள் பூசை என்பன இடம்பெற்று அன்னதானத்துடன் நிகழ்ச்சிகள் முடிவுற்றன.

தொடர்ந்து மாதமொரு முறை அந்தர் யோகத்தை நடாத்தவிருப்பதாகவும், வெகு விரைவில் பகவத்கீதை வகுப்புகளும் ஆரம்பிக்கப்படவிருப்பதாகவும் இவற்றில் கலந்து பயனடைய விரும்புபவர்கள் தன்னுடன் தொடர்பு கொள்ளலாம என்றும் திருநெல்வேலி ராம கிருஷ்ணலய அமைப்பாளர் இரா. மகேந்திரசிங்கம் தெரிவித்துள்ளார்.

# அமரர் அலன் ஆபிரகாமின் வானியல் ஆய்வு

[யாழ்ப்பாணம்]

''தனது வாழ்வின் பெரும் பகுதியைக் கணித, வானியல், இசைத் துறைகளை ஆராய்வதிலேயே செலவிட்ட பேராசிரியர் அலன் ஆபிரகாம் அம்பலவாணர், வட்டு யாழ்ப்பாணக் கல்லூரியில் கணிதத்துறைப் பேராசிரியராக இருந்தபோது கல்லூரித் தொலைநோக்கியினுல் காரைநகரில் ஒருதிறந்த வெளியிலிருந்து வான் வெளியை அவதானித்துக் கொண்டிருப்பார். இந்த அவதானங்களே 1910ம் ஆண்டில் தோன்றிய ஹலியின் வால்நட்சத்திரத்தைப் பற்றி மிகவும் துல்லியமாகக் கூற உதவியாயிருந்தன.''

இவ்வாறு வடமாநில கல்விப் பணிப்பாளர் திரு ஆர். சுந்தரலிங்கம், அமரர் அலன் ஆபிரகாம் அம்பலவாணரின் ஞாபகார்த்தக் கூட்டம் காரைநகர் யாழ்ற்றன் கல்லூரியில் நடைபெற்றபோது உரையாற்றுகையில் கூறிஞர்.

நிகழ்ச்சி யாழ் பல்கலைக்கழக ஆங்கிலத்துறைத்தலைவர் திரு கே.சிவகுருநாதன் தலைமையில் நடைபெற்றது. திரு சுந்தரலிங்கம் தொடர்ந்து உரையாற்றுகையில், ''சுன்ஞகம் குமாரசாமிப் புலவரிடம் தமிழ் பயின்ற அம்பலவாணர் அவர்கள் ஒரு சிறந்த பாடகருமாவார்'' என்றுர்.

நிகழ்ச்சிக்குத் தலைமைவகித்த திரு. சிவகுருநாதன் தமதுரையில, ''கல்வியில் பூரணத்துவமடைந்திருந்த அம்பலவாணர் அவர்கள் தமிழ் இலக்கியம், சங்கீதம் போன்றவற்றிலும் பாண்டித்தியம் பெற்றிருந்தார்'' எனக் குறிப்பிட்டார்.

திரு. அம்பலவாணர், ஹலிவால் நட்சத்திரத்தின் 1910-ம் ஆண்டு வருகையையும், அதன் வருகை பூமியில் என்ன தாக்கங்களை ஏற்படுத்தும் என்பதையும் கூறியிருந்தார்.

மற்றும் யாழ்ப்பாணக் கல்லூரியின் அதிபர் திரு. ஏ கதிர்காமர், சட்டத்தரணி டபிள்யூ. ஏ. செந்தில்நாதன், யாழ்ப்பாணக் கல்லூரியின் விஞ்ஞானத்துறையின் தலைவர் திரு. ரி. விஸ்வநாதன் ஆகியோரும் உரையாற்றினர்.

இறுதியாக அலன் ஆபிரகாம் அம்பலவாணரின் ஞாபகார்த்தக் குழுச் செயலாளர்

(7ம் பக்கம் பார்க்க)

## தந்தை செல்வா மறைவுதின நிகழ்ச்சிகள்

[சாவகச்சேரி]

தந்தை செல்வாவின் மறைவு தினத்தினையொட்டி அறவழிப் போராட்டக்குழு இம்மாதம் 26-ம் திகதி கைதடி வயோதிபர் இல்லத்தில் சிரமதானம், பிரார்த்தனை, நூலகம் ஆரம்பித்தல் போன்ற நிகழ்ச்சிகளை நடாத்தத் தீர்மானித்துள்ளது.

கைதடி வயோதிபர் இல்லத்தில் இருக்கின்ற ஒரு வார்ட்டினை, அறவழிப் போராட்டக் குழுவின் அங்கமான செண். ஜோன்ஸ் அம்புலன்ஸ் பிரிவு பொறுப்பேற்றுக் கண்காணிக்கவும் தீர்மானித்துள்ளது

### லிபியா மீதான அமெரிக்க தாக்குதல் பற்றிய

# முஸ்லிம்களின் குமுறலை அரசு வெளிப்படுத்தவில்லை!

## யாழ். முஸ்லிம்கள் கவலை

[யாழ்ப்பாணம்]

''லிபியா போன்ற முஸ்லிம் நாடுகள்மீது அமெரிக்கா நடாத்திவரும் ஆக்கிரமிப்புகள், தாக்குதல்கள் தொடர்பாக இலங்கை முஸ்லிம் மக்களது மனக்கொதிப்பை இதுவரையும் இலங்கை அரசு வெளிப்படுத்தவில்லை என்பது எமக்கு அதிர்ச்சி தருகிறது''.

ஜனதிபதி ஜே ஆர். ஜெயவர்த்தனுவிற்கு அனுப்புவதற்காக யாழ் அரசாங்கஅதிபர் திரு. எம். பஞ்சலிங்கத்திடம் நேற்று யாழ் மாவட்ட முஸ்லிம் மக்கள்சார்பில் கையளிக்கப்பட்ட மகஜரில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்மகஜரில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

மக்கள் அதிகமாக வாழும் லிபியாவின் திரிபோலி, பெங்காசி நகரங்களின் குடியிருப்பு பகுதிகளிலும் வெளிநாட்டு தூதரகப்பகுதிகளிலும் நடாத்திய குண்டுத் தாக்குதல்கள் யப்பானில் கிரோசிமா, நாகசாகி நகரங்களில் இடம்பெற்ற அணுக்குண்டு வீச்சுத் தாக்குதலின் பின்னர் இடம்பெற்ற அமெரிக்காவின் மிக மோசமான மனிதகுலவிரோத நடவடிக்கையாகும். செயலில் சிறுவர்களும், பெண்களும் உட்படப் பல பொது மக்கள் கொல்லப்பட்டும், காயமடைந்தும் உள்ளனர்.

றீகன் தலைமையிலான அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நடவடிக்கையை மாக்கிரட் தட்சரின் பிரித்தானிய அரசு ஆதரித்து அதற்கு விமானத்தளவசதியும் அளித்துள்ளது. இந்த மனுக்குல விரோதிகளின் நடவடிக்கையை கண்டித்து ஆர்ப்பாட்டம் செய்யும்யாழ் மாவட்ட முஸ்லீம் மக்களுக்கு ஆதரவாக யாழ் மாவட்டமக்கள் அனைவரும 17-ம் தேதி ஹர்த்தாலில் ஈடுபட்டனர்,

இலங்கையின் சகல முஸ்லிம் மக்களது சார்பாகவும் அவர்களது ஏனைய நண்பர்கள் சார்பாகவும் யாழ். மாவட்ட முஸ்லிம் மக்கள் அமெரிக்காவினதும், பிரிட்டனதும் ஏகாதிபத்திய பயங்கரவாதத்தைக் கண்டிக்கிறுர்கள். முஸ்லிம் மக்களாகிய நாம் உலக முஸ்லிம் மக்களுக்கு எதிரான தாக்குதல் நடத்திய அமெரிக்காவையும் அதற்கு ஒத்துழைப்பு நல்கிய பிரிட்டனையும் கண்டிக்கும் எமக்கும், எமது நண்பர்களாகிய இலங்கை மக்களதும் உள்ளத்து உணர்வுகளை அரசும் பிரதிபலிக்க வேண்டும் என வற்புறுத்துகின்ருேம்.

மேலும் காலம் தாழ்த்தாது இலங்கை அரசு லிபிய அரசுக்கும, லிபிய மக்கள் தலைவர் கேர்ணல் கடாபி அவர்களுக்கும் தனது ஆதரவை வெளிப்படுத்துதல்வேண்டும் எனவும் காலம் தாழ்த்தாது அமெரிக்காவையும், பிரிட்டனையும், ஆக்கிரமிப்பில் ஏற்கனவே பங்குபற்றிய இஸ்ரவேலையும் இலங்கை அரசு கண்டித்தல் வேண்டும்எனவும் வலியுறுத்துகின்ருேம். [க

## 'குருளைச்சாரணர் உதவ வேண்டும்'

(மாவிட்டபுரம்)

''இன்றைய கால கட்டத்தில் குருளைச் சாரணர்களின் பணி அவசியமானது அவர்கள் மக்களுக்கு பல்வேறு வகைகளில் உதவ முடியும், முதலுதவி பாதுகாப்பு, ஆபத்து நேரங்களில் உதவுதல் போன்ற பணிகளில் குருளைச் சாரணர்கள் கவனம செலுத்த வேண்டும்''

இவ்வாறு மாதகல் சென் ஜோசெப்பாடசாலையில் இடம்பெற்ற குருளைச் சாரணர் தலைவர் பயிற்சி நெறியில் கலந்து சான்றிதழ்களை வழங்கி உரையாற்றிய மாவட்ட சாரண ஆணையளர். திரு. நா. போஜன் கூறிஞர். உதவி மாவட்ட சாரண ஆணையாளர் திரு ஜி நடேசபிள்ளை தலைமையில் நடைபெற்ற இப்பயிற்சி நெறியில் மானிப்பாய், வட்டுக்கோட்டை பகுதிகளைச் சேர்ந்த 54 மாணவர்கள் கலந்து கொண்டனர்.

## செட்டிகுளம் பகுதியில்

# 500 வீடுகள் அமைப்பதற்கு ஐ.ச.பொ. நிறுவனம் உதவும்

[வவனியா]

வவனியா மாவட்டத்தில் உள்ள செட்டிகுளம் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 500 வீடுகள்அமைப்பதற் ஐரோப்பிய சமூக பொருளாதார நிறுவனம் உதவி செய்ய முன்வந்துள்ளது

வன்செயலின்போது பாதிக்கப்பட்ட நேரியகுளம்,நொச்சிகுளம், அடப்பன்குளம் ஆகிய கிராமங்களிலுள்ளவர்களுக்கே இவ்வுதவி கிடைக்கவுள்ளது.

இந்த மூன்று கிராமங்களிலும 500 வீடுகள் கட்டுவதற்கான பொருளாதார உதவிகள் வழங்கும்பொருட்டு, ஐரோப்பிய சமூக பொருளாதாரப் பிரதிநிதி திரு. பண்கில் நாளை சனிக்கிழமை இங்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார். அத்துடன் இவர் வவனியா அரசாங்க அதிபரையும் மற்றும் உயர் அதிகாரிகளையும் சந்தித்து இது சம்பந்தமாக உரையாடவுள்ளார். [மா]

## மணி வாக்கு

திறனுய்வு என்னும் துறை முதலில்லா வியாபாரம் போன்றது; மிகச்சிறு செலவுடன் மிகப்பெரிய அஞ் சத்தக்க செல்வாக்குடைய மனிதராக விளங்க வழி உண்டு.

— டாக்டர் சாமுவேல் ஜோன்சன்

## நமது நோக்கு

# தக்க தீர்ப்பு

அக்மீமன அளித்த தீர்ப்பு மக்கள் தீர்ப்பு

சிறிலங்கா சுதந்திரக் கட்சி தனது செல்வாக்கால் அத்தொகுதி பாராளுமன்ற ஆசனத்தை மீண்டும் கைப்பற்ற முடிந்ததென்ற விளக்கம் முற்றிலும் உண்மையானதல்ல.

நாடிருக்கும்நிலையில் இன்றொரு தேர்தல் — இடைத் தேர்தல் தானும் நாட்டை முறியடிக்கும் சூருவளி பற்றிய கருத்தையே முக்கியமாகக் கொண்டிருக்கும்.

இந்த வகையில் இன்று இந்நாட்டு மக்கள் தினசரி கொல்லப்படும் அனுவசியமான, அநியாயமான போரையும், அதன் அட்டூழியங்களையும் எதிர்த்தே மக்கள் வாக்களித்திருக்கின்றனர்.

இன்று உலகுக்கே பெரிய அபாயமான ஏகாதிபத்திய ஆதரவு இன்றையஇலங்கை ஆட்சிக்கு உண்டு. தங்கு தடையின்றிக் கிடைக்கும் நிதி உதவியால் நாட்டின் கடன் பளு நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமும் வளர்ச்சியடைகிறது. அதேசமயம் மக்கள் பட்டினி கிடவாது, பாணையாவது வாங்கி உண்டு உயிர் வாழ்கின்றனர். கடந்த சிறிலங்கா ஆட்சியில் பாணுக்கேற்பட்ட தட்டுப்பாடு இன்றும் நினைவுகூரப்படுகிறது.

கடன்பளு பற்றி நாணயம் இழந்து, கந்தறுந்த திட்டங்களில் செல்வத்தை விரயமாக்கும் பொறுப்பற்ற அமைச்சுகளுக்கு என்ன கவலை!

திட்டங்கள், குறிப்பாக வீடமைப்பு தொடர்ந்து செயற்படுகின்றன; மக்கள் நெருக்கடிக்குள்ளாகி, ஆட்சிக்கு அவலம் விளைவிக்கும் நடவடிக்கைகளில் இறங்கும் நிலை உருவாகவில்லை.

அதேசமயம் இன்று நாட்டைக் குட்டிச்சுவராக்கும் இன வாதமும் அது ஏற்படுத்தியிருக்கும் போரும் பொதுமக்களின் கண்டனத்துக்காளாகியிருப்பதற்கு அக்மீமன போதிய சான்று.

கேட்டுக் கேள்வியின்றி சின்னஞ்சிறிய நாடாகிய லிபியாவை உலகின் 'ராட்சத' நாடென்று கொள்ளப்படும் அமெரிக்க மலை தாக்க முற்பட்டால் அதன் பிரதிபலிப்பு உலகெங்கிலும் காணப்படும்.

கட்டுக்கடங்காத கேணல் கடாபியின் கூற்று இக்கருத்துக்கு முரண்பட்டது. அமெரிக்க மக்களில் - தனி அமெரிக்க மனிதனில் ஆத்திரங் கொண்டு தாக்குதல் நடத்துவது நியாயமாகாது, தர்மமாகாது.

நாம் குறிப்பிடும் கருத்து சர்வலோகநாயகனுகிய சிவபெருமானுக்கு விழுந்த பிரம்படியை அடிப்படையாகக்கொண்டது.

கட்டுக்கடங்காத பரம்பொருள் வந்தி என்னும் கிழவிக்குக் கூலியாளாக வந்து பிட்டுக்கு மண் சுமந்தபோது அந்த ஏழையின் பங்கை-தம்முடைய பொறுப்பை நிறைவேற்றத் தவறியதால் பாண்டிய மன்னன் பிரம்படி கொடுத்தான் என்கின்றது திருவிளையாடற் புராணம்.

அந்த அடி, அண்ட சராசரங்கள் அனைத்திலும் பட்டது. கூலியாளாக வந்த பரம்பொருளுக்குக் கொடுத்த தண்டனை நீதி தவறியதால் உலகனைத்தும் தண்டனைக்குள்ளானது.

ஒருஇடத்தில் அநீதியென்றால் உலகனைத்திலும் அநீதியென்பதை நாம் இலகுவில் புரிவதில்லை.

வடக்கையும் கிழக்கையும் இணைக்க முன்வந்த பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர். டீக்கு கண்டி பாதயாத்திரை எதிர்ப்பாயிருந்ததை குறிப்பிடும் ஜே ஆர். இன்று அவருடைய ராணுவம், பாதயாத்திரைக்கு மட்டுமல்ல அங்கப்பிரதட்சணைக்கேஅவகாசமில்லாது அந்தரிக்கின்றது. நேர்த்திக்கடனின் குறை அதென்பதை அவர் உணரமுடியவில்லை. அக்மீமனவிலும் இறைவனின் கரம் தென்படுவதை அவர் காணமுடிகிறது

அனைத்துலகும் ஜனதிபதி றீகனை அவருடைய கோழைச் செயலுக்காக வன்மையாகக் கண்டித்திருக்கின்றன. மெலியாரை வலியார் தீண்டினுல் வலியாரைத் தெய்வம் கேட்கும். கேணல் கடாபி தான் மெலியார் என்பதை ஏற்றுக் கொள்ளமாட்டார்; அது வேறு விடயம்.

இந்த அருமந்த அமெரிக்காவும் அதற்கு வால் பிடிக்கும் பிரிட்டனும்- இவ்விரண்டின் ஆதரவில் எதனையும் சாதிக்கலாம் என்று நினைக்கும் இன்றைய இலங்கை அரசும், தென் இலங்கை மக்கள் அக்மீமனவில் விடுத்த தீர்ப்பை மகேஸ்வரன் தீர்ப்பாகக் கொண்டு உள்நாட்டுப் போரை மட்டுமல்ல உலகப்போருக்கும் தூபமிடாது தடுக்கவேண்டும்.

## ஷெல் அடித்து சேதம்

[யாழ்ப்பாணம்]

யாழ் கோட்டை இராணுவத்தின் ஷெல் தாக்குதலால் யாழ். காணிப்பதிவுக் காரியாலயக் கண்ணுடிகள் உடைந்துள்ளன. சுவர்களில் குண்டு துளைத்த அடையாளங்கள் காணப்படுகின்றன. இக்காரியாலயத்தில் கடமைபுரிந்து கொண்டிருந்த ஊழியர்கள் மதில்ஏறிக் குதித்துத் தமது இருப்பிடங்களுக்குச் சென்றனராம்.

## இடமாற்றம் ரத்து

[பண்டத்தரிப்பு]

அளவெட்டி அரசினர் வைத்தியசாலை மருந்துக் கலவையாளர் திரு. கே. எம். நடராசாவின் இடமாற்றம் கொழும்பிலுள்ள சுகாதார திணைக்கள தலைமை அலுவலகத்தில் ரத்து செய்யப்பட்டுள்ளது. வட்டுக்கோட்டை மத்திய மருந்துச்சாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருந்ததை ரத்து செய்யுமாறு அரசாங்க மருந்துக் கலவையாளர் சங்க யாழ் மாவட்டக் கிளையும், அளவெட்டி பகுதியிலுள்ள பொதுநல நிறுவனங்களும் சுகாதார திணைக்களத்தை கேட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

# உட்செவி திறக்கட்டும் அகக்கண் ஒளி தரட்டும்

வலது குறைந்த தமிழ் சிறுவர்களின் கல்வித் தேவைகள் உதாசீனம் செய்யப்படுவதானது கண் பார்வையற்றவர்களின் கல்வி மட்டுமின்றி இதர துறைகளையும் தழுவி நிற்கின்றது புதிய வேலைத் திட்டத்தின் கீழ், உள ரீதியில் வலது குறைந்தோருக்கு கல்வி புகட்டும் முறைகள் மற்றும் நுட்பங்கள் பற்றியும் 25 பட்டாரி ஆசிரியர்களுக்கு மகரகம ஆசிரியர் கல்லூரியில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. சிங்களப் பிரதேசமானகொழும்பு, கம்பஹா, களுத்துறை, மாத்தளை, குருநாகல் ஆகியவற்றில் உளரீதியில் வலது குறைந்த சிறுவர்களுக்கான விசேட பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன இதே போன்று பாடசாலைகளில் வலது குறைந்த சிறுர்களை இனம் காணுவதற்கான ஒரு முன்னேடி வேலைத் திட்டம் 'யூனிசெப்' உதவியுடன் களுத்துறை, அநுராதபுர மாவட்டங்களில் அறிமுகப் படுத்தப்பட்டு வருகிறது. நாம் அனைவரும் கௌரவத்தில் சமமானவர்களே என்பது மனித குடும்பத்தைச் சார்ந்த அனைத்து உறுப்பினர்களையும் உணர வைக்கக்கூடிய ஒரே சாதனமாகிய கல்வியானது எமது தாயகத்தில் திறமை அடிப்படையில் பெறக்கூடிய சம வாய்ப்புகளை தமிழ் மாணவர்களுக்கு மறுப்பதற்கு மட்டு மன்றி, தமது பரிதாபகரமான நிலையிலிருந்து மீளுகின்ற முனைப்பில் சிங்களச் சகோதர மாணவர்களுடன் கூட்டாகப் பிரயத்தனம்மேற்கொள்ளுவதற்கான வாய்ப்பினை வலது குறைந்த தமிழ் மாணவர்களுக்கு மறுக்கப்படுவது பெரும் வேதனைக்குரியது.

முழு இலங்கைக்குமான ஒரு விரிவான திட்டத்தை வகுக்க அரசு தவறியுள்ள பொழுதிலும் தமிழ் பிரதேசங்களில் கண் பார்வையற்ற சிறுவர்களின் அத்தியாவசிய தேவைகளை அணுகி ஆராய்வதற்கான ஒரு 7 அம்ச வேலைத் திட்டம் இங்கு தரப்படுகிறது.

கண் பார்வையற்றவர்களுக்கான ஒரு நடுநிலைப்பாடசாலை தமிழ்மொழி நெறியில் அமைக்கப்படுவதற்கு முதன்மை முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும் யாழ்ப்பாணம் கைதடியிலுள்ள நவீல்ட் பாடசாலையை கட்புலனற்ற, செவிப்புலனற்றவர்களுக்கான பாடசாலையென இருவேறு நிலையங்களாகப் பிரிப்பது பற்றி 1976 ல் இலங்கை கட்புலனற்ற செவிப்புலனற்றவர்கள் பாடசாலையின் ஆளுநர் சபை இயற்றிய தீர்மானத்தை அமுல் படுத்துவதாகவும் இது ஒரு விதத்தில் அமையும். புதிய கைதடி பாடசாலை அதனது வளர்ச்சியின் முதற் கட்டத்துக்கு மாதிரியாக இரத்மலானை பாடசாலையை பயன்படுத்துவதுடன் க.பொ. [சா/த] வகுப்பு மாணவர்களையும் தயார் செய்ய முடியும் இங்கிலாந்து திருச்சபைபொது இலக்கணப் பாடசாலை, வேர்செஸ்டர் கல்லூரி ஆகியவற்ருல் வழங்கப்படும் சில உதவிகளைக் கொண்டு கைதடி, இரத்மலானைப் பாடசாலைகள் எதிர்காலத்தில் க. பொ. த. உயர்தர வகுப்புகளையும் ஆரம்பிக்கும் நிலையை எய்த முடியும்.

நாம் அறிந்த வரையில்வேர்செஸ்டர் மாணவர்களுக்கு மூன்ரும் படிவத்தில் இருந்தே தொழில் வழி போதனை அளிக்கப்படுகிறது. இவர்களில் பலர் ஒஃஸ்போட், கேம்பிறிச் போன்ற உயர் கல்வி நிலையங்களில் சென்றுள்ளனர்; பலர் தாம் தேர்ந்தெடுத்த தொழில்களில் மிக உயர்ந்த மட்டங்களையும் எட்டியுள்ளனர்.

ஒரு பாடசாலையென்பது ஒரு போதனுஸ்தலம் என்பதைக்காட்டிலும் இளம் மக்களைக்கொண்ட ஒரு சமுதாயமே என மறைந்த அதிகுரு வானவர் டெம்பிள் [Temple] கூறியதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். உயர் படிவங்களில் பட்டதாரி ஆசிரியர்களின் வழி நடாத்தலில் பயிலும் முக்கிய மாணவர்கள் பள்ளிச் சமுதாயத்தை ஒரு சமாஜமாக மாற்றத் துணை செய்யமுடியும் என்பதுடன் தமது சொந்த தலைமைத்துவ

## கு. நேசையா

சிறப்பியல்புகளையும் மேலும் விருத்தி செய்ய முடியும்.

கைதடி கட்புலனற்றவர்களுக்கான பாடசாலை விரிவடையும் காலப்போக்கில் அதனை ஆண்கள், பெண்கள் பிரிவு என இருவேறு பிரிவுகளாக்கி, இருவேறு அதிபர்களின்கீழ் இயக்கவைப்பது அவசியமாகலாம்.

கண்பார்வையற்றவர்களுக்கான ஒரு கல்வி விருத்தித் திட்டத்தின் ஆரம்பமாக மட்டுமே யாழ். நகரில் ஒரு நடு நிலைப்பாடசாலை அமைய முடியும். இதரபிரதேசங்களில் ஆரம்ப பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். மருத்துவ பரிசோதனை, பராமரிப்பும் போதனை ஆகியன இவற்றுக்கு முன்கூட்டியே மேற்கொள்ளப்பட வேண்டும்

வலது குறைந்தோருக்கு கல்வியின் பாலான மனவிருப்பையும், அத்தகைய கல்வி வலதுகுறைந்த நிலையிலும் ஆற்றலை இனங்காணும் தன்மையையும் ஏற்படுத்துவனவாகவே இக்கல்வியும், உபசேவைகளும் அமைய வேண்டும்.

ஒருங்கிணைப்பின் முக்கிய நோக்கம் ஒரு ஆற்றலுள்ள கண்பார்வையற்ற மாணவனுக்கு நல்லதொரு பாடசாலையை அமைத்துக் கொடுக்கும் அதேவேளை வலது குறைவற்ற இதரமாணவர்களுடன் சமூக ரீதியில் சகஜமாகப் பழக துணை செய்வதுமேயாகும்.

வலது குறைந்தோர் சமுதாயத்தில் தமக்ககான இடத்தை வகிக்கவும், தமது ஆளுமையை விருத்திசெய்து வளர்க்கவும், வழிநடாத்துதல், ஆலோசனை வழங்கல், வேலைவாய்ப்பளித்தல் ஆகியன மிகமுக்கியத்துவம் வாய்ந்தவையாகும்.

இம்மாணவர்களுக்கும், எல்லாமாணவர்களுக்கும் பாடசாலையானது வாழ்க்கை முழுவதும் சுய - சுயபோதம் பெறும் நீண்ட நிகழ்வுப்போக்கின் ஓர் ஆரம்பமாக அமைய வேண்டும்.

இலங்கைப் பல்கலைக்கழகங்கள் சிலவற்றிலாவது வலது குறைந்தோர் விரிவுரை மண்டபங்களில் வீற்றிருக்கும் காட்சியை காணும் போதே தான் எமது பல்கலைக்கழகங்களின் வளர்ச்சிக்கு ஒரு சான்ருக இருக்கும், இவ்வகையில் விசேட பாடசாலைகளில் பணிபுரிவதற்கானப் பட்டதாரி ஆசிரியர்களைப் பயிற்றுவதிலும் இத்துறையிலான ஆய்வு முயற்சிகளுக்கு ஊக்கமளிப்பதிலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு ஒருமுக்கியப் பொறுப்பு உண்டு.

பாடசாலையிலும் பல்கலைக்கழகத்திலும் பயிலும் தமிழ் மொழிநெறி மாணவர்களுக்கு பிரேயிலியில்பாட நூல் தேவை பயிற்சி முடிந்து வெளியேறும் மாணவர்களுக்கு பொதுவான வாசிப்புக்கு என்று புத்தகங்கள் தேவை. வலதுகுறைந்தோருக்கான சுவிடன் ஸ்தாபனம் வழங்கிய நிதியுதவியுடன் இவ்வாண்டு மகரகமவில் அமைக்கப்பட்ட நவீன பிரெயிலி அச்சகம் சிங்களத்திலும் தமிழிலும் புத்தகங்களை தயாரிக்கும் என்று தெரியவருகிறது.

எமது முன்னேர்கண்ட பிரகாரம் கல்வியானது வாழ்க்கை முழுவதிலுமான ஒருநீண்ட நிகழ்வு போக்காலுல் அல்லது வாழ்க்கையானது போதம் பெறும் நிகழ்வுப் போக்காலுல் நூல்களையும், புதினப் பத்திரிகைகளையும் கொண்டுள்ள பொது நூல்நிலையங்கள் வலது குறைந்தோருக்கான வாசிப்பு சாதனங்களையும் நிச்சயம் கொண்டிருக்க வேண்டும் வாசிப்பதற்கான உரிமை மனிதனது மீறவொண்ணு உரிமைகளில் ஒன்ருகும். வாசிப்பு மகிழ்ச்சியையும், அறிவையும் உயர் அபிலாஷைகளையும் மனிதனுக்கு வழங்குகிறது,

உள்நாட்டு, வெளிநாட்டு நிதிவளங்கள் பிறவாய்ப்புள்ள எமது கிறிஸ்தவ திருச்சபைகளினதும், திருச்சபைச்சார் நிலையங்களினதும் காதுகளில், கண்பார்வையற்ருேரின் அவலக்குரல் விழுமா?

ஊனமுற்ருேர் கல்விக்கு குறிப்பாக கண்பார்வையற்ருேக்கு நாம் எவ்வாறு உதவலாம்?

டாக்டர் சசிதரனை விடுவிக்கும்படி

## அல்வாயூர் பொது ஸ்தாபனங்கள் முப்படைத் தளபதியிடம் கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

கைதுசெய்து காவலில் வைக்கப்பட்டுள்ள சங்கிலியன் அகதிகள் புனர் வாழ்வு நிலையத்தின் தலைவர் டாக்டர் சசிதரனை விடுதலைசெய்யுமாறு அல்வாயைச் சேர்ந்த பல பொதுநல ஸ்தாபனங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

அல்வாய் மனோகரா சன சமூக நிலையம், மனோகரா கிராம அபிவிருத்திச் சங்கம், மனோகரா மகளிர் கிராம அபிவிருத்திச்சங்கம்சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் கோயில் பரிபாலன சபை, அல்வாய் தெற்கு கிராமிய குடும்பசுக நலத்திட்டம், மனோகரா ஆரம்ப சுகாதார நிலையம் ஆகிய ஸ்தாபனங்கள் ஒன்றிணைந்து யாழ். அரசாங்க அதிபருக்கும் முப்படைக்கூட்டுத்தளபதிக்கும் இவ்வேண்டுகோளை விடுத்துள்ளன.

டாக்டர் சசிதரன் மேற்படி ஸ்தாபனங்களின் உறுப்பினராகவிருந்து அவற்றின் வளர்ச்சிக்கு பெரும்பாடுபட்டுள்ளார் என்றும் எந்த ஒரு இயக்கத்துடனும் தொடர்பில்லாது அவர் இடம்பெயர்ந்துவந்த அகதிகளின் நல்வாழ்வுக்காக சங்கிலியன் புனர்வாழ்வு நிலையத்தின் தலைவராக இருந்து அரும்பெரும் பணியாற்றியுள்ளார் என்றும் இவ்வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தாதிமார்...

(1ம் பக்கத்தொடர்ச்சி)

களின் கீழ் இதன்மீது போடப்பட்ட தடையை நீக்குமாறு அமைச்சர்களைக் கேட்டுக்கொண்டது. இது தொடர்பான சிபார்சை ஜனாதிபதியிடம் தெரிவிப்பதாக அமைச்சர்கள் உறுதியளித்தனர்.

இத்துடன் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்ட தாதிமார்களின் சேவைமூப்பு, சம்பளம் ஆகியவற்றைக்குறைக்க வேண்டாமெனவும் இச்சங்கம் அமைச்சர்களைக் கேட்டுக்கொண்டது.

இக்கோரிக்கைகளை ஏற்றுக்கொண்ட அமைச்சர்கள், தம்மீது தாதிமார் சங்கத்தினால் தொடரப்பட்ட வழக்குகளை வாபஸ்பெறும்படியும் கேட்டுக்கொண்டனர். [ய]

## 4709 நாய்களுக்கு தடுப்பூசி!

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரிபிரிவில் 4709நாய்களுக்கு விசர்நாய் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது அத்துடன் கோப்பாய் பகுதியில் திரிந்த கட்டாக்காலி நாய்கள் 103 அழிக்கப்பட்டன. சுகாதாரத் தொண்டர்களின் உதவியோடு சுகாதார உத்தியோகத்தர்கள் இப்பணியில் ஈடுபட்டனர் என கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஓ. விஜயரத்தினம் தெரிவித்தார்.

## தீவுப்பகுதி போக்குவரத்து சீர்குலைவு

[வண்ணார்பண்ணை]

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தாக்குதல்களால் கோட்டைக்கு அருகாமையில் உள்ள வீதிகளில் போக்குவரத்துச்செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது

இதனால் தீவுப்பகுதிமக்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

பண்ணைத் தாம்போதிக்கருகில் அமைந்துள்ளதாலும், காரைநகர் பாலம் கடற்படை முகாமிற்கு அருகில் இருப்பதாலும் பிரச்னைகள் ஏற்படும் காலங்களில் தீவுப்பகுதியின் தொடர்பு அடிக்கடி துண்டிக்கப்படுகிறது.

நேற்று தீவுப்பகுதிக்குத் திரும்பிச் செல்ல முடியாத மக்களும் அங்கிருந்து திரும்பிவர முடியாத மக்களும் பெரும் கஷ்டங்களை அனுபவிக்க வேண்டிய நிலை இருந்தது சிலர் நாவாந்துறையிலிருந்து சிறிய படகுகளின் மூலம் ஊர்காவற்றுறை பிரதான வீதியை அடைந்து அங்கிருந்து தமது பகுதிகளுக்குச்சென்றனர்.

யாழ். ஆஸ்பத்திரியில் சுகமீன முற்றிருப்பவர்களுக்கு காலை உணவு கொண்டுவந்தவர்கள் திரும்பிச்செல்லமுடியாது நின்றனர். சிலநோயாளர்களிடம் இப்பகுதியிலிருந்து வரவிருந்த உறவினர்கள் வர முடியாததால் உணவற்றநிலை இருந்தது.

## இலங்கை...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

ஹமீத் புதுடில்லியில் ஒரிரு நாட்கள் தங்கியிருப்பார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-பி)

## 23 பேர்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கொண்டிருந்த சமயம் மொரவெவ சந்தியில் இருந்து கால் மைல் தூரத்தில் விடுதலைப்புலிகளினால் வைக்கப்பட்ட கண்ணிவெடியில் ஒரு ட்ரக் சிக்கி முற்றாகச் சேதமடைந்ததுடன் அதில் வந்த 23 விமானப்படையினரும் பலியாகினர். எமதுதரப்பில் எதுவித இழப்பும் ஏற்படவில்லை'' [மா]

## 3 கோப்ரல்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

சிங்கலமாசிறி, கணேவத்த வெதமாத்தயா (70வயது ஆகிய இருவரும் கொல்லப்பட்டுள்ளனர். (ய)

## திரியாயில் முகாம்

(திருகோணமலை)

திருமலை மாவட்டத்திலுள்ள திரியாயில் ஆயுதப்படையினரின் முகாம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்த முகாம் அமைக்கப்பட்டதால், இதன் சுற்றுப்புறத்தில் வசித்துவந்த தமிழர்கள் அச்சம் காரணமாக குடும்பம் குடும்பமாக வெளியேறிக்கொண்டிருக்கின்றனர்.

நேற்றும் சுமார் 20க்கு மேற்பட்ட குடும்பங்கள் முல்லைத் தீவுக்கு அகதிகளாக சென்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. [மா]

## 6070 மாணவர் அனுமதி

[கொழும்பு]

1986/87 கல்வியாண்டில் 6,070 மாணவர்களுக்குப் பல்கலைக்கழகங்களில் அனுமதி வழங்க பல்கலைக்கழக மன்ய ஆணைக்குழு முடிவு செய்துள்ளது.

இது கடந்த ஆண்டு பல்கலைக்ழகங்களுக்கு அனுமதி பெற்ற மாணவர்களினது எண்ணிக்கையைக் காட்டிலும் 12 வீதம் அதிகமானதாகும்.

## புதிய..

[1ம் பக்கத் தொடர்ச்சி]

புதிதாக உத்தியோகத்தில் சேர்ந்து கொண்டவர்கள் மார்பு சம்பந்தப்பட்ட வைத்திய அத்தாட்சியைப் பெறுவதிலேயே கஷ்டப்படுவதாகத் தெரிகிறது.

யாழ். ஆஸ்பத்திரியிலும், பண்ணை ஆஸ்பத்திரியிலும் 'எக்ஸ்றே' கருவிகள் பழுதடைந்து இருப்பதனால் வைத்திய அதிகாரியிடம் சமர்ப்பித்து வைத்திய அத்தாட்சியைப்பெறமுடியாமல் இருக்கிறது.

முன்பு தனியார் மருத்துவ நிலையங்களில் 'எக்ஸ்றே' படங்களை எடுத்து அதனை வைத்திய அத்தாட்சியைப் பெற்றுக்கொள்ள முடிந்தது.

ஆனால் தற்சமயம் பண்ணை மார்பு நோய் வைத்தியசாலையில் கடமைபுரியும் அதிகாரி தனியார் வைத்தியசாலையில் எடுக்கப்படும் 'எக்ஸ்றே' படங்களைத் தாம் ஏற்றுக் கொள்ள முடியாதெனத் தெரிவித்துள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

இதனால் உத்தியோக வாய்ப்பு பெற்றுக்கொண்டவர்கள் வைத்திய அத்தாட்சியைப் பூரணத்துவப்படுத்தித் தம்மை அரச சேவையில் உறுதிப்படுத்திக் கொள்ள முடியாமல் திண்டாடுகிறார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே யாழ். ஆஸ்பத்திரியிலும், பண்ணை ஆஸ்பத்திரியிலும் உள்ள 'எக்ஸ்றே' கருவிகளை திருத்தி உதவுமாறு இவர்கள் வேண்டுகோள்விடுத்துள்ளனர். [ஐ]


## கடைசிநேர வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

மறுசீரமைக்கப்பட்ட C 90 விற்பனைக்குண்டு. இல 88 ஸ்ரீ மாலை4-6 மணிவரை பார்வையிடலாம். தொடர்பு: சாந்தி சினிமா முன்பாக, பாலகன் வீடியோ சென்றர், யாழ்ப்பாணம். [C 1852]

சாவகச்சேரி அல்லாரையில் 10 பரப்பு தென்னந்தோட்டக் காணி. குடியிருப்பதற்கும் தோட்டம்செய்வதற்கும் பாதுகாப்பான மேட்டுநிலக்காணி பரப்பு 2000/-. 9துண்டுகளாக விற்பனைக்குண்டு. சாவகச்சேரியிலிருந்து 2. K.M. தொடர்பு 119, பெரியகடை, யாழ்ப்பாணம். [C 1851]

### தவறிவிட்டது

இல. 533641483 V அடையாள அட்டையும் அத்துடன் இ. மி. ச அறிமுக அட்டையும் யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறைக்கு போகும் வழியில்தவறிவிட்டது அதைக் கண்டு எடுத்தோர் அதனில் உள்ள விலாசத்துக்கோ அல்லது பு தெய்வேந்திரன் No 6, முதலியார் லேன், என்னும் விலாசத்திற்கு அனுப்பி வைக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். தகுந்த சன்மானம் வழங்கப்படும். [C 1843]

17-4-86 முழங்காவிலுக்கும் சங்குப்பிட்டிக்கும் இடையில் க. பூபாலபிள்ளை புவனேந்திரன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் முழங்காவில் சிவன் ஸ்ரோர்ஸ் அல்லது இரத்தின மோட்டோர்ஸ் ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் கடையில் ஒப்படைக்கவும். C 1853

லிடோ Jaffna
10-30, 2-30, 6-30
சிவாஜி, உஷாநந்தினி
சாரதா, எம்.ஆர்.ஆர்.வாசு
நடித்த
**என்னைப்போல் ஒருவன்**
(கலர்)

5வது வாரம்
**வெலிங்டன்**
10-30, 2-30, 6-15
சிவகுமார், மோகன்
அம்பிகா, கவுண்டமணி
நடித்த
**நான் பாடும் பாடல்**
(கலர்)

## 2-ம் வருட நினைவஞ்சலி

### திருமதி துரைரட்ணம்

உதயம்: 11-01-1925
அஸ்தமனம்: 10-05-1984
திதி: 19-04-1986

எங்கள் குடும்பத்தில் குலவிளக்காய் வழிகாட்டி ஒளிவிளக்காய் வாழ வைத்த தெய்வமே! ஆண்டு இரண்டு சென்றாலும் ஆறாத்துயரில் வாடுகின்றோம் அம்மா!

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

அன்புக் கணவன்,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

பொ. துரைரத்தினம்,
ஊரெழு கிழக்கு,
ஊரெழு. (A 600)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



### அமரர் சின்னத்தம்பி வேலாயுதம்

தோற்றம்; 08-07-1928
மறைவு: 20-03-1986

எங்கள் குடும்பத்தின் தந்தையாய், தாயாய் ஒளிவிளக்காய், அன்புடனும் பாசத்துடனும், வாழ்ந்து எம்மை வாழவைத்த தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தியடையபிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் இல்லத்தில் இன்று (19-4-86) பகல் அந்தியேட்டிக் கிரியைகள் நடைபெறும். இந்நிகழ்ச்சிகளில் பங்குபற்றி அன்னாரின் ஆத்மசாந்திக்கு பிரார்த்திக்குமாறு வேண்டுவதோடு எமது துயரில் பங்கு கொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இங்ஙனம்,
மனைவி, பிள்ளைகள்.

பண்டிதர் மாணிக்க
தியாராசர் வீதி,
சுன்னாகம். (C 1850)

## பிரயாண ஒழுங்குகள்

### டென்மார்க், பிரான்ஸ், ஜேர்மனி, அவுஸ்திரேலியா

மற்றும் சில நாடுகளுக்கு எமது அநுபவம்வாய்ந்த முகவர் உங்களை அழைத்துச் செல்வார். அத்துடன், அவசர பாஸ்போட், பாஸ்போட், BOND, ரிக்கட் மிகவிரைவாக செய்துகொள்ள

**M/S ரஜீவன் ட்ரவல்ஸ்,**
42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
B. M. C. முன்பு. T.P. 23665
(C 1849)

## உருக்கமான வேண்டுகோள்

17-04-86 வியாழக்கிழமை இரவு இனந்தெரியாத சிலரால் எமது E,L.F. 30 Sri 5790 சந்தனக்கலர் வான் கடத்தப்பட்டுள்ளது. எமது தகப்பனார் ஏற்கனவே அதிசுகவீனமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். வான் பறிபோன நிலையில் எமது தாயும் கவலைக்கிடமாக சுகவீனமுற்றுள்ளார். இவ்வாகனம் இன்றேல் வருமானத்துக்கு வழி இல்லை. தற்கொலை செய்வதைத் தவிர வேறு வழி இன்றித் தவிக்கின்றோம். புனித இயக்கங்கள் முயற்சித்து எமது வாகனத்தை மீட்டுத் தருமாறு மிகவும் பணிவுடன் வேண்டுகிறோம்.

மகள் தெ. தேவறஞ்சினி,
தெ. சிவாஜினி.

மட்டுவில் தெற்கு,
மட்டுவில். [C1844]

## யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபையின் 1986ம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல்

கீழே குறிப்பிடும் சந்தைகளுக்கு 10-5-86ம் திகதி தொடக்கம் 31-12-86ம் திகதி வரை குத்தகைக்கு கொடுப்பதற்கு சீல்வைத்த கேள்விகள், 30-04-1986ம் திகதி நண்பகல் 12-00 மணிவரை கீழே குறிப்பிடும் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரால் கேள்விப் பத்திரம் வழங்கப்பட்ட 2-5-86ம் திகதி நண்பகல் 12-00 மணிவரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும். தேவையான விபரங்களை யாழ்ப்பாண அபிவிருத்திச்சபைத் தலைமைக் காரியாலயத்திலும் உப அலுவலகங்களிலும் அறிந்துகொள்ளலாம்.

| உப அலுவலகம் | குத்தகையின் தன்மை | மதிப்பிடப்பட்ட தொகை |
|---|---|---|
| 1. நல்லூர் | திருநெல்வேலிச் சந்தை | ரூபா 3,50,0 0/- |
| 2. சுன்னாகம் | சுன்னாகம் சந்தை | ரூபா 3,25,000/- |
| 3. கச்சாய் | கொடிகாமம் சந்தை | ரூபா 1,25 000/- |
| 4. பண்டத்தரிப்பு பட்டினம் | பண்டத்தரிப்புச் சந்தை | ரூபா 1,00,0 0/- |
| 5. கிளிநொச்சி | கிளிநொச்சிச் சந்தை | ரூபா 1,00 000/- |
| 6. சங்கானை | சங்கானைச் சந்தை | ரூபா 50 000/- |
| 7. ஊர்காவற்றுறை | ஊர்காவற்றுறைச் சந்தை | ரூபா 30,000/- |

வை. மு. பஞ்சலிங்கம்
செயலாளர்,
யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை.

அபிவிருத்திச்சபை அலுவலகம்,
செயலகம், யாழ்ப்பாணம்.
1986-04-18. [A 596]

### யாழ். இலக்கிய வட்டம்

# இலக்கிய நோக்கத்தையே அடிநாதமாக கொண்டுள்ளது

## 20-வது ஆண்டறிக்கையில் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

கொள்கை வேறுபாடுகள் இருப்பினும்அவற்றை விஞ்சிய இலக்கிய நோக்கத்தை அடிநாதமாகக் கொண்டு யாழ் இலக்கிய வட்டம் 1965 ம் ஆண்டு உருவாக்கப்பட்டது. யாழ். மாவட்டத்திலுள்ள ஆற்றல் மிக்க பழைய, புதிய தலைமுறை எழுத்தாளர்களை உறுப்பினராகக் கொண்ட யாழ் இலக்கிய வட்டம் 'உறுப்பினர்களின் படைப்புக்களை நூல்களாக வெளியிடுவது இலக்கிய முயற்சியில் ஈடுபட்டுழைத்த பெரியார்கள், எழுத்தாளர்களுக்கு விழா எடுத்தல், புலவர் தினங்களைக் கொண்டாடுதல், இலக்கியப் பிரச்னை, கதை கட்டுரை நாடக அரங்குகளை நடாத்தல் கட்சி பேதமின்றி இலக்கிய முயற்சிகளுக்கு ஊக்கமளித்தல் ஈழத்து நூல்களை மக்களின் முன் பரவலாகப் பிரச்சாரம் செய்தல் என்பனவற்றைஇலட்சியமாகக் கொண்டுள்ளது.

இவ்வாறு யாழ். இலக்கிய வட்டத்தின் 20 வது ஆண்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வறிக்கையில் மேலும் காணப்படுவதாவது:

யாழ். இலக்கிய வட்டம் தனது இலக்கியச் சேவையில் இரு தசாப்தங்களைக் கடந்து 3 வது தசாப்தத்தை நோக்கிச் சேவையாற்ற ஆரம்பித்துள்ளது.

கடந்த காலச் சாதனைகளை எண்ணிப் பார்க்கையில் எழுத்தாளர்களிடையேயும் வாசகர்கள் மத்தியிலும் புத்துணர்வையும் விழிப்புணர்வையும் ஏற்படுத்தியுள்ளமை குறித்துக் களிப்படைகின்றோம். இந்த மகிழ்ச்சி மக்கள் மத்தியில் இன்று வலுப் பெற்றுள்ள எங்கள் நாடு, எங்கள் வாழ்வு எங்கள் எழுத்து என்ற தேசிய மனப்பான்மையின் எதிரொலி என்பதனை யாவரும் உணர்வர்

கடந்த இரு தசாப்தங்களில் 32 நூல்களை வெளியிட்டுள்ளோம்.

நமது நாட்டிற்கேற்ப தனி வழியுடன் பொதுவாகத் தமிழ் வளர்ச்சியையும் கருத்திற் கொண்டு செயற்பட எழுத்தாளர்களைத் தூண்டுவதும் யாழ் இலக்கிய வட்டத்தின் குறிக்கோளாகும். (ஐ)

---

## வாழ்க பல்லாண்டு

செந்தமிழ் வளர, சிறப்புடன் விளங்க
இந்த யாழ்ப் பாண இலக்கிய வட்டம்
ஐநதொரு பதினைந் தாண்டுகள் இயங்கி
வந்தது மேலும் வாழ்க பல் லாண்டு

-புலவர் வே. கனகசபாபதி

---

## இன்றைய பலன்

மாதம்- சித்திரை
திகதி- 6 (19 - 4 - 1986)
கிழமை- சனி
திதி- தசமி
பி. இ வரை
நக்ஷத்திரம்- ஆயிலியம்
பி. ப வரை

மேடம்: வித்தையில் வெற்றி காணுவீர்கள். வேண்டியது கிடைக்கும். பொது ஜனத் தொடர்பும். புகழும் கிட்டும்

இடபம்: பொருள் வரவு புத்துணச்சியைத் தரும் மேலிடத்து ஆதரவு தபபாமல் கிட்டும். தித்திக்கும் செய்தியும் தேனுன வாழ்வு முண்டு.

மிதுனம்; எண்ணங்கள் ஆயிரம் சிந்தையிலே வந்து உந்தும். ஏமாற்றம் தாக்கும் விந்தையான போக்கு வேடிக்கை காட்டும் தலைப் பகுதியை பாதுகாக்கவும்.

கடகம்: அவசர புத்தியினுல் விபரீதங்கள் விளையலாம் கொடுத்த இடத்தில் எதிர்ப்புக்கள் உருவாகும் உடல்நிலை சீர்குன்றும். கோபத்தை அடக்கவும்.

சிங்கம்: வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு பல வழிகளிலும் முயற்சி செய்வீர்கள். புதிய தொழில் துறையொன்றில் வாய்ப்புக் கிடைக்கும் முன்னேற்றம் உண்டு.

கன்னி: சகோதர பாசம் தலை தூக்கி நிற்கும் வேண்டிய ஒருவரைச் சந்திக்கத் துடிப்பீர்கள். மனதில் எண்ணங்கள் தோன்றி மறையும்.

துலாம்: குடும்பக் கவலையுடன் குறுக்கு வழித்தலையீடும் தென்படும். உங்களைப்பற்றிய புனைந்துரைகள் பரப்புவதற்கு சிலர் முற்படுவார்கள் இன்று அதிக பேச்சைத் தவிர்க்கவும்.

விருச்சிகம்: வெளியிடத் தொடர்புகளில் மந்தநிலை காணப்படும். தொழில் சம்பந்தமான கவலைகள் அதிகரிக்கலாம். உடல் நலன் பாதிக்கக் கூடும். சுகாதாரம் வேண்டும்

தனுசு; உறவாடிக் கெடுப்பதறகு பகையாளிகள் வருவர் உஷ்ண ரோகத்திற்கும் இடமுண்டு. வாகனச்சாரதிகள் போக்குவரத்தில் அவதானம் வேண்டும்.

மகரம்: வெற்றி உமதருகில் விரைந்து வரும் எதிர்த்தவர்களை ஆகரவு தருவர், களஸ்திர வழியாலும நன்மைகள் சேரும் காதலர்களுக்கு இனிப்பான தினம்


கும்பம்: வேண்டிய ஒருவரைப்பகைத்துக் கொள்ள நேரும் அவசரப்போக்கினுல் ஆபத்துக்கள் விளையும். முதவீட்டைத் தவிர்த்துக் கொள்ளவும்.

[7ம் பக்கம் பார்க்க]

---

### அராலியின்

## வைத்திய ஒளி



அராலி வைத்திய கலாநிதி நமசிவாயம் துரைரத்தினம் அவர்கள் மறைந்து மாதமொன்றுக்குமேலாகிவிட்டது. மக்களின் நம்பிக்கைக்கும் நன்மதிப்புக்கும் பாத்திரமாகிய இவர் நிறைவான வாழ்க்கையுடன் இயற்கையெய்திய பெருந்தகையாவர். ''பரியாரியார்'' என அன்புடனும், பாசத்துடனும், உரித்துடனும் அழைக்கப்பட்ட இவர் ஆயுள்வேதத்துறையல் கைதேர்ந்து விளங்கிய கம்பஹா அறிஞர்களிடம் பயிற்சி பெற்றுப் பாண்டித்தியமும் பெற்றுர். மிக அடக்கமாக, எளிமையாக, சாந்தமாக வாழ்ந்த இவர் தான் பெற்ற கலையை புகழைத்தேடி விலைபேசி விற்கவோ அல்லது அதன்மூலம் ஏனைய பல்வகை அநுகூலங்களைச் சாதிக்கவே கிஞ்சித்தும் விளையாதவர், நாணய மனிதரான இவரின் இழப்பு இன்று ஒரு பெரிய வெற்றிடத்தையே நம்மூர் வைத்திய பாரம்பரியத்தில் ஏற்படுத்தி விட்டது எனலாம்.

கட்டுத்தொகை கட்டி, வரிசையில் நின்று ஒருசில நிமிடங்களில் மட்டும் வைத்தியர்களைக் காணும் மேலைத்தேச வைத்திய மரபு இன்று மேலாட்சி செய்யும் காலத்தில் கீழைத்தேச வைத்திய மணிகளின்பங்களிப்பைப் பலர் உண்மையாகவே அறியாதிருக்கலாம் இத்தகைய பாரம்பரியம் படைத்தவர்கள் தம்மை நாடியோருக்கு நிழல்தரும் பழமரங்களாக விளங்கியமையை நம்நாட்டுச் சுதேச வைத்தியர்கள் பலரின் புகழ் பூத்தவரலாறு எமக்கெடுத்தியம்புகின்றது இம்மரபில் வழிவந்த வைத்திய கலாநிதி அவர்களும் தம்மை அணுகிய நோயாளிகளின் வாழ்வை மலரச் செய்யப் பின்னிற்கவில்லை. தமது கைபிடித்திறமையால் நாடியின் ஓட்டத்தைக் கணித்து கருவிகள் கொண்டு பிடிப்பதைவிடச் சிறப்பான முறையில் நேய் இன்னது என அறியும் அபாரத்திறமை இவருக்கிருந்தது.

மணிக்கூட்டில் விழிவைத்து வெறும் வருமானத்தைப் பெருக்குவதற்காக இவர் இத்தொழிலில் ஈடுபடவில்லை. மாருக தனது பொருள் நேரம். வருமானம் ஆகியவற்றுள் இவருக்கு அக்கறையே இருக்கவில்லை. தமமை நாடி வந்தவர் பிணிதீர்த்து அவர்களை நல்வழிப்படுத்திய நல்லாசானுகவே வைத்திய கலாநிதி அவர்கள் இறுதிவரை வாழ்ந்தவர். சன்னிக்கோ எனில் பெயர் பெற்ற வித்தகர். மேலைத்தேச வித்தகர்கள் கூட கைவிட்ட பலரை நன்னிலைப்படுத்தி மேன்மையும் அடைந்தவர் இவர்.

அன்னை காளிதேவியிடம் இவருக்கிருந்த ஈடுபாடு அதிகம். அஃது மட்டுமன்றி எச்சமயமும் நற்சமயம் என எண்ணும் மனுேபாங்கு. இவரது பூசை அறையை அலங்கரிக்கும் பல்வகைச் சமய சின்னங்கள் இதற்குத்தக்க சான்ருகும்.

வைத்திய கலாநிதி அவர்கள் நம்மூருக்காற்றிய சேவை என்றும் எவராலும் மறைக்கவும் மறுக்கவும் படாதென்ருகிவிடுகிறது ஊரின் வாழ்விலும் வளத்திலும் தன்னை ஈடுபடுத்தியதினுலாற்ருன் இன்று அவரது இழப்பு பேரிழப்பாக ஈடுசெய்யமுடியாத தொன்ருக உணரப்படுகின்றது.

தந்தையிடம் தக்கவாறு பயிற்சி பெற்றதனயன் மோகனதாஸ் அவர்கள் தொடர்ந்தும் தந் தவழி நின்று நம்மவர் பிணிதீர்த்து நம்மவர்க்கெல்லாம் ஒரு நிழல் தரு பழமரமாகி நிற்பார் என்று எண்ணும்போது பேரிழப்பின் பின் ஒரு ஆறுதல் ஏற்படவே செய்கின்றது. எனவே நம்மவர் கனவை நனவாக்கும் பொறுப்பு 'தம்பி' எனச் செல்லயாக யாவராலும் அழைக்கப்பட்ட வைத்திய கலாநிதி அவர்களின் ஏக புத்திரனுகிய ''தம்பி மோகனதாஸ்'' தந்தை விட்டுச்சென்ற பணியைச் சிறப்பாகத் தொடரவேண்டும். மகனின் பணியும் பண்பும் வைத்தியரின் ஆன்மா சாந்திக்கும் உதவட்டும் எனப் பிரார்த்திக்கிறோம்.

கலாநிதி
க. சிற்றம்பலம்.

---


வேகமாக விற்பனையாகின்றது!

"கேள்வியும் நிரப்பலும்"

ந. பேரின்பநாதன், ப. சிவநாதன்
(யாழ். பல்கலைககழக விரிவுரையாளர்கள்)

விலை ரூபா 18/-

60க்கும் அதிகமான விளக்கப் படங்களுடன் 150 பக்கங்களைக் கொண்டுள்ளது.

தொகையாக கொள்வனவு செய்யும் மாணவர்களுக்கு விசேட கழிவு வழங்கப்படும்.

வெளியீடு:
பட்டப்படிப்புகள் கல்லூரி, 148/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (A 592)



விக்னு டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம்.

[விஞ்ஞான பிரிவுகளுக்கான தனித்துவம் வாய்ந்த ஆசிரியர்கள் ஒருங்கிணைந்து நடாத்தும் ஒரேயொரு நிறுவனம்]

88/87 விஞ்ஞான பிரிவுகளுக்கான புதிய பிரிவு

ஆரம்பம்: 19-4-1986 மாலை 1-00 மணி

தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு:

இரசாயனம்: — பிரபல ஆசிரியர்
பௌதிகம்: — திரு. விக்கி
விலங்கியல் — திரு. நரேந்திரன்
தாவரவியல் — பிரபல ஆசிரியர்
தூய, பிரயோகணிதம் — திரு. தயாபரன்

87 Puremaths: Calculas
Applied Maths: Dynamics
(மாலை 3-00 மணி)

மு. குறிப்பு:
★ விஞ்ஞான பிரிவுக்கான அச்சடித்த குறிப்புக்கள் இலவசமாக வழங்கப்படும்.
★ விஞ்ஞான பிரிவுகளுக்கான மாதாந்தக் கட்டணம் குறைவாக அறவிடப்படும்.

(A 447)



பிரயாண ஒழுங்குகள்

கனடா, ஜேர்மனி, பிரான்ஸ், டென்மார்க்

ஆகிய நாடுகளுக்கு எமது முகவர்
21-ம் திகதி உங்களை அழைத்துச்செல்வார்.
உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

★ குவைத்தில் சாரதியாக செல்பவர்களுக்கு ஏற்ற வருமான ஒழுங்குகளும் உடனடியாக செய்து கொடுக்கப்படும்.
★ மாலைதீவு செல்வதற்கு பிரயாண ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்படும்.
★ சவூதி செல்வதற்கும் பிரயாணஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

பாஸ்போட், BOND, ரிக்கற்
முதலியனவும் உடனுக்குடன் செய்துதரப்படும்.

GROUP ATLANTIC
HOSPITAL ROAD, JAFFNA.
(அடைக்கலமாதா கோவிலுக்கு முன்பாக)
(A 420)

# 'நமது வளங்களை பாதுகாக்க சுதேசிய உணர்வு அவசியம்'

(யாழ்ப்பாணம்)

''இன்றைய கால கட்டத்தில் சுதேசியம் பற்றிய உணர்வு தமிழ்ப் பகுதிகளில் பரவ வேண்டும் நமது கலை கலாசாரங்களையும், நமது வளங்களையும் காப்பாற்றுவதற்கு சுதேசியம் என்ற உணர்வு நம் மக்களைப் பற்றி நிற்றல் அவசியமாகும்.''

இவ்வாறு அரியாலை சரஸ்வதி மத்திய சன சமூக நிலையத்தினரால் கொண்டாடப்பட்ட சுதேசிய திருநாட் விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ் மாநகர சபை ஆணையாளர் திரு. சீ. வீ. கே. சிவஞானம் கூறினார்.

67 வது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவில் அவர் மேலும் பேசுகையில்; ''நாடு சுதந்திரம் அடையு முன்னரே சுதேசியம் என்ற உணர்வு இன்று பரவலாக மக்களுக்கு ஏற்பட்டுள்ளது. 1919 ம் ஆண்டு முதலாக சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாக்களை நடாத்தி வருவதிலிருந்து இது தெரிகிறது'' என்றார்,

சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாக்கள் திரு. கா. குணரத்தினம் தலைமையில் நடைபெற்றன.

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் திரு. சி. சிவகுருநாதன் தீபம் ஏற்றி வைத்துப் பேசுகையில்;... ''ஒவ்வொரு தேசிய இனத்துக்கும் தனித்துவ கலாசாரம், பண்பு, உண்டு. அரியாலை மக்கள் மருத்துவம், விஞ்ஞானம் கலை, விளையாட்டு ஆகிய துறைகளில் முன்னேறி உன்னத நிலையை இங்கும், பிற நாடுகளிலும் வகிக்கிறார்கள். சுதேசிய உணர்வு மனதில் பதிந்து பிரகாசிக்க வேண்டும்'' என்றார். (ஐ)

## விழிப்புக் 'குழு

[யாழ்ப்பாணம்]

இராசாவின்தோட்ட வீதி, கோவில் வீதி, சோமசுந்தரம் வீதி, றக்காவீதி ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கிய பகுதிக்கு 'விழிப்புக்குழு' ஒன்று அண்மையில் அமைக்கப்பட்டுள்ளது.

உத்தியோகத்தர் விபரம்: தலைவர்: அமிர்தன் ராஜகாரியர் [சட்டத்தரணி], உப தலைவர்: யோ. பெனடிக்ற் பாலன் [விரிவுரையாளர் ஆசிரியர் கலாசாலை], செயலாளர்: அ. அமிர்தராஜ் [ஆசிரியர்], உப செயலாளர்: வி கே. ராஜரட்ணம், பொருளாளர்: எஸ். வேலாயுதம் பிள்ளை [கூட்டுறவு ஆணையாளர்] மேலும் பத்து நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். [ஐ]

# "அமெரிக்கத் தாக்குதல் கண்டிக்கப்பட வேண்டியது"

## 'புளொட்' விடுத்துள்ள அறிக்கை

(யாழ்ப்பாணம்)

''கடந்த 14-ம் திகதியன்று லிபியாமீது அமெரிக்க ஏகாதிபத்தியம் நடாத்திய காட்டுமிராண்டித்தனமான விமானத்தாக்குதலை தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம் [புளொட்] வன்மையாகக் கண்டிக்கிறது. சமாதானத்தையும் நல்வாழ்வையும் நாடி தமிழீழம் போன்ற 3-ம் உலக நாடுகளில் உள்ள மக்கள் நடாத்துகின்ற போராட்டங்களை சர்வதேச அரங்கில் அமெரிக்க ஏகாதிபத்தியமும் அதன் சகபாடிகளும் பயங்கரவாதமெனவலிந்து பிரச்சாரம் செய்துவந்துள்ளன. இப்பிரச்சாரத்தை வலுப்படுத்துவதன் மூலமே அமெரிக்கா தனது ஆக்கிரமிப்பு யுத்தங்களை, அட்டகாசங்களை நீதியின் சார்பில் செய்யப்பட்டவையாக தன்னுட்டு மக்களுக்கும் ஏனைய தன்னைச் சார்ந்துள்ள முதலாளித்துவ நாட்டு மக்களுக்கும் நியாயப்படுத்த முயற்சிக்கின்றது. லிபியக் குடியரசின் தலைவர் கடாபியை ஒரு பயங்கரவாதியாகவும், லிபியா ஒரு சர்வதேசப் பயங்கரவாத மையங்களைப் பேணும் நாடாகவும் சித்தரிக்கின்றது.''

இவ்வாறு லிபியாமீது அமெரிக்கா மேற்கொண்ட தாக்குதலைக் கண்டித்து 'புளொட்' விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

''இத்தாக்குதலிற்கான ஒரு முன்னுரையே அமெரிக்க ஏகாதபத்தியமும் அதன் அடிவருடிகளும் உலகில் நிகழும் நியாயமான மக்கள் போராட்டங்களை பயங்கரவாதமென கூறுவதன் பின்னணியில் இதுபோன்ற மிலேச்சத்தனமான ஆக்கிரமிப்புச் செயல்களே உள்ளடக்கமாக உள்ளன. லிபிய மக்களுக்கும், தம் உரிமைகளுக்காகப் போராடும் அனைத்து மக்களுக்கும் சமாதானத்திற்கும் ஒரு பெரும் மிரட்டலான இத்தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

''தமிழீழ விடுதலைப் போராட்டமும் ஏகாதிபத்திய எதிர்ப்பு முனைப்பினைக் கூர்மைப்படுத்தச் செயல்பட வேண்டிய அவசியத்தை இச்சம்பவம் உணர்த்துகின்றது எம்முடைய நியாயமான போராட்டத்தையும் பயங்கரவாதம் என முத்திரை குத்துவதன்மூலம் அமெரிக்க, இஸ்ரேலிய பயங்கரவாதிகளின் நீசத்தனமான பிரச்சாரத்திற்கும் செயல்களுக்கும் துணை போவதன்மூலம் சிறிலங்கா அரசு இஸ்லாமிய மக்களுக்கும் அரபு மக்களுக்கும் எதிரான நிலைப்பாட்டைத் தெட்டத்தெளிவாக வெளிப்படுத்தியுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கதே.

''இதுதொடர்பாக யாழ். மாவட்ட இஸ்லாமிய மக்கள் நேற்றுமுன்தினம் நடாத்திய எதிர்ப்புப் போராட்டதை நாம் வெகுவாக வரவேற்கிறோம்.''

# "அமெரிக்காவின் மனித நேயமற்ற செயல்"

## — தமிழீழ மாணவர் பேரவை

[யாழ்ப்பாணம்]

''வாஷிங்டன் வெள்ளை மாளிகையில் உள்ள பயங்கரவாதிகளால் மேற்கொள்ளப்பட்ட மனித நேயமற்ற நாகரீகத்திற்குப் புறம்பான இச் செயல் மூன்றும் உலகநாடுகளை ஆக்கிரமிக்கும் அமெரிக்காவின் நீண்டபட்டியலில் மேலும் ஓர் நடவடிக்கையாகும்.''

லிபியாமீது அமெரிக்கா நடத்திய தாக்குதலைக் கண்டித்து தமிழீழமாணவபேரவை விடுத்துள்ள கண்டன அறிக்கையில்மேற்கண்டவாறு கூறப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் கூறியதாவது:

லிபியாமீது காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்நடாத்திய அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் அரச பயங்கரவாதச் செயலை தமிழீழ மாணவர் பேரவை வன்மையாகக் கண்டிக்கின்றது.

பாலஸ்தீன மக்கள்மீது சியோனிசபயங்கரவாதிகளால் நாள்தோறும் கட்டவிழ்த்து விடும் காட்டுமிராண்டித்தனமான நடவடிக்கையும் சேர்ந்து அரபிய மக்களின் நலன்களைச் சீர்குலைப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையென்றே இதனை நாம் கருதுகின்றோம்.

உலக சமாதானத்தை விரும்பும் போர்க்குணம் மிக்க லிபிய மக்கள் மீது நடாத்திய இத்தாக்குதலை நாம் மீண்டும் மீண்டும்கண்டிப்பதுடன் அமெரிக்க ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்திகள் ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டுமெனவும் கேட்டுக் கொள்கின்றோம்.

## அமரர் அலன்

(3ம்-பக்கத் தொடர்ச்சி)

நன்றியுரையைக் கூறியதுடன் குழுவின் பணிகளை மீளாய்வு செய்தார். அத்துடன் அன்னுருக்கு காரைநகர் அலன் வீதிச் சந்தியில் ஒரு சிலையை நிறுவுவதென்ற குழுவின் திட்டத்தையும் பரிசீலனை செய்தனர். ]பி,

## இன்றைய பலன்

[6ம் பக்கத் தொடர்ச்சி]

மீனம்: உறவு முறைகள் பலப்படும். பெரியோர் ஆசியும். பிதாவழிப் பெருமையும் கிட்டும் விருந்தினர் வருகையும் உண்டு.

திருமலை
வே. ரவீந்திரன்


## பிரயாண ஒழுங்குகள்

**கனடா, டென்மார்க், ஜேர்மனி**

முதலிய நாடுகளுக்கு எமது முகவர் உடனடியாக உங்களை அழைத்துச் செல்வார்.

அத்துடன்

**சவூதி அரேபியா, குவைத், டுபாய்**

ஆகிய நாடுகளுக்கு ஆண், பெண் இருபாலார்க்கும் ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.

(கிளினேர்ஸ், டிறைவர்)

பாஸ்போட், விஸா, பொண்ட், ரிக்கற் உடனுக்குடன் செய்து கொடுக்கப்படும். உடனடியாக தொடர்பு கொள்ளவும்.

விலாசம்;

**யூனிவேஷல் ஏஜென்சி**

No; 125 (455) ஸ்ரான்லி வீதி,
பெற்ரோலியம் கூட்டுத்தாபன முன்பாக
யாழ்ப்பாணம். (C 1829)


# "உணர்ச்சி இலக்கியம் படைக்கும் சமூகப் போராளி டானியல்"

(மானிப்பாய்)

சமுதாயத்தில் புரையோடிக் கொண்டிருக்கின்ற தீமைகளுக்கு உரியபரிகாரம் காணும் ஒரு சமூக விஞ்ஞானியே எழுத்தாளன் டானியல் ஒரு உலகளாவிய முற்போக்கு சித்தாந்தத்தை வரித்துக்கொண்டிருந்தபோதும் அவரது இலக்கியங்கள் பெரும்பாலும் தான் பிறந்த மண்ணைச்சுற்றியே விளங்கின. அவரது இலக்கியங்கள் இன்னமும் தக்கமுறையில், சீரிய பார்வையோடு பயன்படத்தக்கவகையில்விமர்சிக்கப்படவில்லை.

மறைந்த எழுத்தாளர் கே. டானியலின் நினைவஞ்சலிக் கூட்டத்தில் கருத்துரை வழங்கிய பிரபல எழுத்தாளர் திரு. எஸ். அகஸ்தியர் இவ்வாறு தெரிவித்தார்.

ஆனைக்கோட்டை உயரப்புலம் ஐக்கிய சனசமூக நிலைய ஆதரவில் கிராம சபை மைதானத்தில் திரு த. சிமியோன் (பாபு) தலைமையில் நடைபெற்ற இந்த அஞ்சலிக் கூட்டத்தில் திரு. அகஸ்தியர் மேலும் கூறியதாவது:

திரு. டானியலின் இலக்கியங்கள் பெரும்பாலும்அனுபவ வாயிலாக வெளிப்படும் உணர்ச்சிப் பீறல்களாக விருப்பதால் மக்கள் மத்தியில் வரவேற்பைப்பெற்றன. அவர் நசுக்கப்பட்ட மக்களின் உணர்ச்சிகளை உள்ளடக்கிய இலக்கியங்களை வெளிக்கொணர்வதில் ஒரு சமூகப் போராளியாகவும் விளங்கினார்.

டானியலின் இலக்கியங்கள் சாதாரண மக்கள் பேசும் மொழியில் லாவகமாகக் கையாளப்பட்டதாலும் அம் மக்களின் வாழ்க்கை நிலைப்பாடுகளை சித்தரித்ததனாலும் இதே மக்கள் அவரை உற்ற சகோதரன்போல் நேசித்தார்கள். அந்த நேசிப்பு டானியலின் இலக்கிய சிருஷ்டிகளுக்குக் கிடைத்த வெற்றியாகும்.

வண பிதா இம்மானுவேல் அடிகள் தமது உரையில்; எல்லோருக்கும் வாழ உரிமை இருக்கின்றது என்பதை திரு. டானியல் தமது எழுத்தின் மூலம் வலியுறுத்திவந்தார்.

பொது உடைமைக்கு கிறிஸ்தவர்கள் எதிரானவர்களல்ல எனவும் குறிப்பிட்ட வண. பிதா எத்தனையோ பிரச்னைகளை சந்தித்து, சகித்தே டானியல ஒரு எழுத்தாளனாகத் திகழ்ந்தார்.

திருவாளர்கள் பொன். பொன்ராசா, க. கணேசலிங்கம், த. அந்தோனிப்பிள்ளை, க. வரதராசா, மி. பேரின்பநாயகம். யோ யோன்சிங்கம், எஸ். பிரான்சிஸ்பிள்ளை ஆகியோரும் உரையாற்றினர்கள்.

# பரீட்சை எடுக்க முடியவில்லை

(வண்ணார்பண்ணை)

நேற்று ஊர்காவற்றுறைப் பகுதியில் நடைபெறவிருந்த சங்கீதப் பரீட்சைக்கு தோற்ற வேண்டிய பல மாணவிகள், அங்கு பரீட்சை எழுதச்செல்ல முடியாது கஷ்டமுற்று கல்வித்திணைக்களத்தில் முறையீடு செய்துள்ளனர். நேற்று, வாகனப்போக்குவரத்துக்கள் மிகக்குறைவாக இருந்ததால் யாழ். நகரில் உள்ள பல பரீட்சாத்திகளின் வரவு குறைவாக இருந்தது.

பாதிக்கப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு பரீட்சையில் தோற்றுவதற்கான வசதிகள் செய்து கொடுக்க யாழ். கல்வி இலாகா நடவடிக்கை எடுத்து வருவதாக அறியப்படுகிறது.

# கைலாசபதி வெறும் பேராசிரியர் அல்ல!

## வேம்பிராயில் நூலகத் திறப்புவிழாவில் பேச்சு

(யாழ்ப்பாணம்)

''சமுதாயத்தின் கீழ் தட்டு நிலையிலே வாழ்ந்து கொண்டிருக்கும் பரந்துபட்ட மக்களின் வாழ்க்கையில் ஒரு அடிப்படை மாற்றம் அவசியம் என்பதை உணர்ந்து அந்த லட்சியத்தை நோக்கிய பாதையில் தனது அறிவு, ஆற்றல், செயல்திறன் என்பனவற்றை நமக்கு வழங்கிச் சென்றவர் மறைந்த பேராசிரியர் கைலாசபதி ஆவர். கைலாசபதி அவர்கள் பெயரளவிலான வெறும் பேராசிரியர் அல்லர். அவர் பல்துறை சார்ந்த பெரும் அறிஞராவர். அதற்கு அடிப்படையாக அமைந்தது அவர் ஆழமாகக் கால் பதித்து நின்ற மாக்சிசத் தத்துவம் ஒரு பிரதான காரணமாகும். அதனாலேயே அவர் ஏனைய பேராசிரியர்களை விட வித்தியாசமான பார்வை கொண்ட ஒருவராகத் திகழ்ந்தார். அத்தகைய ஒருவரின் பெயரில் ஒரு பின்தங்கிய கிராமத்திலே நூலகம் ஒன்று உருவாகி இருப்பது மட்டற்ற மகிழ்ச்சியை தருகின்றது.''

இவ்வாறு இருபத்தையாயிரம் ரூபா செலவில் புத்தூர் வேம்பிராய் கிராமத்தில் கட்டப்பட்ட கைலாசபதி நூலகத்தை புதுவருடத் தினத்தன்று திறந்து வைத்து உரை நிகழ்த்திய யாழ். பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் திரு இ முருகையன் கூறினார். நூல் நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த கைலாசபதியின் உருவப் படத்தை திரு. கே. ஏ. சுப்பிரமணியம் திரை நீக்கம் செய்து வைத்தார்.

கலைமதி சன சமூக நிலையத்தின் தலைவர் திரு. கா கதிர்காமநாதன் தலைமையில் நடைபெற்ற திறப்பு விழாக் கூட்டத்தில் திரு. கே. செந்திவேல் சிறப்புரை நிகழ்த்துகையில்; இன்றைய கால கட்டம் மிகவும் நெருக்கடியும் சோதனையும் மிக்க ஒரு காலகட்டமாகும். அரசின் கொடூரச் செயல்களுக்கு எல்லையே கிடையாது என்ற நிலை தோன்றியுள்ளது. இனப்படுகொலைகளைத் தாராளமாகச் செய்து வருவதன் மூலம் தமிழ்பேசும் மக்களை அடக்கி விட முனைகிறது அதே வேளை சிங்கள மக்கள் மத்தியில் தன்னைப்பாதுகாக்க ஒருவிதமான மாயத் திரையையும் விரித்துள்ளது. அரசுக்கும் சிங்கள மக்களுக்கும் இடையில் உள்ளூர வளர்ந்துவரும் முரண்பாடு மிக விரைவிலேயே அரங்கத்திற்கு வந்துவிடும். அப்பொழுது இக்கொடிய அரசு தன் இன மக்களுக்கு எதிராகவும் கொலைத் தொழில் புரியத் தயங்கமாட்டாது என்பதும் உறுதியானதாகும். ஆதலினால் உழைக்கும் சாதாரண மக்களின் ஒற்றுமையும், ஐக்கியமும் சரியான திசை மார்க்கத்தில் கட்டி எழுப்பப்படுவது இன்றைய சூழலில் மிக அவசியமாகும். அந்த வகையில் புத்தூர் வேம்பிராய் கிராம மக்கள் ஏனைய அடக்கி ஒடுக்கப்படும் உழைக்கும் மக்களுக்கு

[8ம் பக்கம் பார்க்க]

# ‘ஆஸ்ட்ரல் - ஆசியா’வை பாகிஸ்தான் வென்றது!

## மியாண்டாட் மின்னல்வேக துடுப்படி!!

[ஷார்ஜா]

ஷார்ஜா கிறிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் கோஷடி ‘‘ஆஸ்ட்ரல்ஆசியா’’ வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது!

பாகிஸ்தானுக்கும்-இந்தியாவுக்குமிடையில் நேற்று நடைபெற்ற இறுதிப் பந்தயத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியக் கோஷ்டி 50 ஓவர்களில் 7 விக்கட்டுக்கள் நஷ்டத்துக்கு மொத்தம் 245 ஓட்டங்களைப் பெற்றது. இக்கோஷ்டியின் ஆரம்பதுடுப்படி வீரர்களான ஸ்ரீகாந்தும், கவஸ்கரும் சிறப்பாகவும், வேகமாகவும் துடுப்பெடுத்தாடினார்கள்.

ஸ்ரீகாந் 75 ஓட்டங்களை மின்னல் வேகத்தில் பெற்றார். இவர் 8 பவுண்டறிகளையும், 2 சிக்ஸர்களையும் அடித்தார். கவஸ்கர் 92 ஓட்டங்களையும், வெங்சாகர் 50 ஓட்டங்களையும் பெற்றனர்.

இதன்பின் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் கோஷ்டியினால் ஆரம்பத்தில் ஓட்டங்களை துரிதமாக எடுக்க முடியவில்லை.

ஒரு கட்டத்தில் 44 ஓவர்களில் 5 விக்கட்டுகள் இழப்புக்கு 185 ஓட்டங்களை மட்டுமே பெற்றிருந்தும் இதன்பின்பு பாகிஸ்தான் கோஷ்டியின் உதவிக் காப்டன் ஜாலிட் மியன்டாட்டின் துடுப்பாட்டம் வேகமடையத் தொடங்கியதும் பாகிஸ்தான் கோஷ்டியினர் 50 ஓவரின் கடைசிப் பந்தையெதிர்கொள்ளும் போது 242 ஓட்டங்களைப் பெற்றிருந்தனர். கடைசிப்பந்தை எதிர்க்கொண்ட வீரர் ஜாவிட்மியண்டாட் அப்பந்தை ‘சிக்ஸருக்கு’ அடித்து, தமது கோஷ்டிக்கு வெற்றியைத் தேடிக்கொடுத்தார்

ஜாவிட் மியண்டாட் இப்போட்டியில் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி. ஆட்டமிழக்காமல் 114 ஓட்டங்களைப் பெற்றமையால் இச் சாம்பியன் மோதலில், சிறந்த விளையாட்டு வீரருக்கான பரிசைத் தட்டிக் கொண்டார்.

இச்சுற்றுப்போட்டித்தொடரில் சிறந்த விளையாட்டு வீரராக கவாஸ்கர் தெரிவு செய்யப்பட்டார்.

### ஸ்ரீகாந் சிறந்த வீரர்

இதேவேளை இந்தியாவில் சகல மாநிலங்களிலும் சிறந்த விளையாட்டு வீரராக தமிழ் நாட்டு கிரிக்கெட் வீரர் ஸ்ரீ காந் தெரிவு செய்யப்பட்டதினால் ‘எஸ். கே. குருநாதன்’ வெற்றிக்கிண்ணம்வழங்கப்படவுள்ளது. (வி)

## 8 வாகனங்கள் மறிக்கப்பட்டு பெரும் வழிப்பறிக்கொள்ளை

[மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த கதுறுவெல என்ற இடத்தில் ஒரு போக்குவரத்துச் சபை பஸ்வண்டி உட்பட ஏழு தனியார் வாகனங்களில் வந்த பயணிகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வழிப்பறிக் கொள்ளைச் சம்பவத்தில் ரூபா 50 ஆயிரம் ரொக்கப்பணம் உட்பட பல பெறுமதியான பொருட்களை இந்த வாகனங்களில் வந்த பயணிகள் பறிகொடுத்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் 15 பேர் கொண்ட ஆயுதக் கோஷ்டியொன்று கதுறுவெலப் பகுதியிலுள்ள மியாங்குளம் என்ற இடத்தில் இக்கொள்ளையை நடத்தியது. அத்துடன் வழிமறிக்கப்பட்ட எட்டு வாகனங்களில் இரண்டு ‘பிக்அப்’ வண்டிகளையும் கடத்திக்கொண்டு அந்த கொள்ளைக்கோஷ்டி தலைமறைவாகிதாகத்யதெரிவிக்கப்பட்டது.

கொள்ளையர்கள் தமிழிலும் சிங்களத்திலும் கதைத்துக் கொண்டதைக் கேட்கமுடிந்ததெனத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த 15ந் திகதி இக்கொள்ளை நடைபெற்ற இடத்தில் ஒரு கண்ணிவெடிச் சம்பவம் இடம்பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது. (கி)

## முல்லை வைத்தியசாலை அருகில் சோதனை

[முல்லைத்தீவு]

முல்லைத்தீவு வைத்தியசாலைக்கு அண்மையில் இராணுவத்தினர் தினசரி சோதனை நடத்துகின்றார்கள்.

இதனால் பஸ், மினிபஸ் பிரயாணிகள் பலரும் பலத்த சோதனைக்குட்படுத்தப்படுவதுடன் பல்வேறு தொல்லைகளுக்கும் உள்ளாகிறார்களாம்.

## தெல்லிப்பளையில் விசேட ஆராதனை

[மாவிட்டபுரம்]

தந்தை செல்வா சிரார்த்த தினம் இம்மாதம் 26 ம் திகதி அனுஷ்டிக்கப்படவிருக்கிறது

தெல்லிபழையில் உள்ள அன்னாரின் சமாதியில் விசேட ஆராசனைகள் இடம்பெற்று தெல்லிப்பழை ப. நோ கூ சங்க மண்டபத்தில் விசேட கூட்டம் ஒன்றையும் நடாத்த ஏற்பாடு செய்யப்படுகிறது.

## வடக்கு—கிழக்கிலிருந்து— நீர்கொழும்பு சென்ற மீனவ அகதிகள் பெரும் அவஸ்தை!

(கொழும்பு)

அண்மைக்கால சம்பவங்களால் வடக்கு கிழச்குக் கரையோரப் பகுதிகளிலிருந்து நீர் கொழும்புப் பகுதிக்கு அகதிகளாக இடம் பெயர்ந்து சென்றுள்ளஆயிரக்கணக்கான மீனவர் குடும்பங்கள் பெரும் அவல நிலையில் இருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

நீர்கொழும்புக் கரையோரக் கடல் பகுதிகளில் மீன்வளம் குன்றியிருப்பதாலும் புதிய மீன்வளத்திட்டுகளைக் கண்டு பிடிக்க அதிகாரிகள் போதுமான உதவி வழங்காத காரணத்தினாலுமே நீர்கொழும்பு மீனவர்கள் மேற்படி சிக்கல்களை அனுபவிக்க நேர்ந்துள்ளதாம்.

பமுனுகமவிலிருந்து பிட்டிப்பனவரையிலான நீர்கொழும்பு கரையோரங்களில் வசித்து வந்த மீனவர்களும், அகதிகளாக வந்துசேர்ந்த மீனவர்களும் கல்பிட்டியிலிருந்து 22 மைல் தொலைவிலுள்ள தீவுகளுக்கு ஏறத்தாழ 4, 000 பேர் இடம் பெயர்ந்துளளனர்.

## அரச அதிகாரிகள் நயினதீவு விஜயம்

[வேலணை]

நயினதீவுஸ்ரீநாசபூஷணிஅம்மன் ஆலயத்தில் சென்றமாதம் ஏற்பட்ட அசம்பாவிதங்களின் சேதங்களைப் பார்வையிடுவதற்காக யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. மு. பஞ்சலிங்கம், ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்ற நீதிபதி பி. பாலவடிவேல், யாழ் மாவட்ட பொதுசனத்தொடர்புகள்அதிகாரியும்நாகபூஷணி அம்மன் ஆலய அறங்காவலர் சபைத்தலைவருமான திரு. த. குலசேகரம் ஆகியோர் இம் மாதம் 24-ம் திகதி [24-4-86 நயினதீவு செல்லவுள்ளனர்.

ஏற்கனவே கோவிலில் ஏற்பட்ட சேதங்களுக்கு அரசு 15 லட்சம் ரூபாய்களைக் கொடுத்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

## மூத்த காங்கிரஸ் பிரமுகர் காலமானார்!

(புதுடில்லி)

இந்தியாவின் மூத்த காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான திரு. அத்துல்யா கேஷ் கல்கத்தா மருத்துவ மனையொன்றில் நேற்றுக் காலமானர்.

8? வயது நிரம்பிய இவர் கடந்த சனியன்று மூளைக் கொதிப்பு நோயினல் பாதிக்கப்பட்டு நினைவற்ற நிலையில் இருந்தார்.

இவரின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் மேற்கு வங்காள சட்டப் பேரவை நேற்று 20 நிமிடங்கள் ஒத்தி வைக்கப்பட்டது.

திரு.அத்துல்யா கோஷின் மறைவுகுறித்து ஆழ்ந்த கவலை தெரிவித்த இந்திய ஜனதிபதி ஜெயில் சிங் ‘‘அவரது அமைப்பு ஆற்றலையும், அவர் நாட்டுக்களித்த சேவைகளையும் என்றென்றும் நாடு நினைவு கூரும்’’ என்று கூறினர். (பி)

## சைவப்புலவர் பரீட்சை

(யாழ்ப்பாணம்]

அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கத்தில் நடாத்தப்பட்டுவரும் பரீட்சை 25ம் திகதி முதல் 27ந் திகதிவரை வண் நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெறும், இளஞ் சைவப்புலவர், சைவப்புலவ ஆகியஇருபகுதிகளுக்கும் பரீட்சார்த்திகள்தோற்றுவர். இலக்கணம். இலக்கியம், சரித்திரம் உரைநடை, வரலாறு ஆகிய பாடங்களில் இப்பரீட்சை இடம்பெறும். ஒவ்வொரு வினாபத்திரமும் 3மணி நேரம் கொண்டது பரீட்சார்த்திகளுக்கு நேரசூசிகை, பிரவேச அட்டை என்பன அனுப்பப்பட்டுள்ளன.

## ஹர்த்தால் சம்பவம்: கடத்தப்பட்டவர் விடுதலை

(யாழ்ப்பாணம்)

யாழ் நகரில் நேற்று இடம் பெற்ற ஹர்த்தால் சம்பவம் தொடர்பாக இயக்கமொன்றினல் நேற்றுக்காலை ஆயுத முனையில் கடத்திச்செல்லப்பட்ட யாழ். கொட்டடியைச் சேர்ந்த ஸ்ரீ மீனாட்சி சனசமூக நிலையத்தலைவரும், இணக்க சபைத்தலைவருமான திரு, செல்லையா விஜயரத்தினம் மாலை விடுவிக்கப்பட்டுள்ளார்

நேற்றுக்காலைகடத்திச் செல்லப்பட்டவரை விடுவிக்குமாறு கோரி கொட்டடிப் பகுதியைச் சேர்ந்த பெண்களும் ஆண்களும் கொட்டடிச்சந்தியில் சத்தியாக்கிரகம் செய்தனர்

நேற்றுமாலை மற்றொருஇயக்கம் இது சம்பந்தமாக தலையிட்டு, கடத்தப்பட்டவரை மீட்டு உறவினரிடம் ஒப்படைத்ததைத்தொடர்ந்து பொது மக்கள் சத்தியாக்கிரகத்தைக் கைவிட்டனர் [மா]

## மோட்டார்சைக்கிள் கடத்தல்!

[யாழ்ப்பணம்)

கிராமந் தோறுஞ் சென்று பால்சேகரித்து வியாபாரம் செய்துவந்த குடும்பஸ்தர் ஒருவரின் 9 ஆயிரம் ரூபா பெறுமதியான மோட்டார் சைக்கிள் இனந்தெரியாத நபர்களால் கடத்திச் செல்லப்பட்டுள்ளது.

திருநெல்வேலியைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தையான ஏ. முத்தையா என்பவரின் மோட்டார் சைக்கிளே கடத்தப்பட்டதாகத் தெரிவிசகப்பட்டுள்ளது. (மா)

## திருட்டு

[யாழ்ப்பாணம்]

தனியாருக்குச் சொந்தமான கூப்பன் கடை ஒன்று உடைக்கப்பட்டு, ரொக்கப்பணம் உட்பட 10 ஆயிரம் ரூபா பொருள்கள் களவாடப்பட்டுள்ளன.

யாழ். ஆஸ்பத்திரி- புகையிரத நிலைய வீதிச் சந்தியிலுள்ள செ நீலகண்டன் என்பவருக்குச் சொந்தமான கடையிலே இத்திருட்டுச் சப்பவம் இடம்பெற்றது. [மா]

## கைலாசபதி...

(7-ம் பக்சத் தொடர்ச்சி)

முன்மாதிரியாகத் திகழ்ந்து வருவது வரவேற்கக்கூடிய தொன்றேயகும். மறைந்த பேராசிரியர் கைலாசபதியின் பெயரில் நூலகம் ஒன்றைக் கட்டி எழுப்பி இருப்பது எதிர்கால அறிதறிக்கான சின்னமாகும் என்று கூறினர்

மேலும் இத்திறப்பு விழாக் கூட்டத்தில் சி. சிவநேசன், க. தணிகாசலம், சோ தேவராஜா, எஸ் சிவலிங்கம், ப. குணரட்ணம், ந இரவீந்திரன் ஆகியோர் உரையாற்றினர். கைலாசபதி குடும்பத்தினரும் இந்நூலகத் திறப்பு விழாவில்கலந்துகொண்டனர்.

## பறைமேளம் அடிக்கத்தடை

(வேலணை)

வேலணை கிழககுப்பகுதியில் மரணப்பறை அடித்துவரும் வழக்கம் சென்ற 17ம் திகதி தொடக்கம் நிறுத்தப்பட்டு விட்டது. இனிமேல் யாரும் இப்படியான தொழிலைச் செய்யக்கூடாதெனவும் சிலவிடுதலை இயக்கத்தைச் சேர்ந்தவர்களால் எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பறைமேளங்களும் அவ் இளைஞர்களால் எடுதது்ச்செல்லப்பட்டுள்ளது சில தினங்களுக்கு முன்னர் வேலணைகிழக்குப பகுதியில் பறை முரசு செய்வோர்களிடம் சென்றஇளைஞர் கோஷ்டியினர் நீங்கள் சாதி மத பேதமின்றி எல்லோருக்கும் பறை அடிக்கவேண்டும் ஒருசாராருக்குமட்டும் பறை அடிக்கக்கூடாதுஎன்றுவேண்டுகோள்விடுத்திருந்தனர். அதற்குச்சம்மதம் கிடைக்காததாலேயே பறைமேளங்கள் அபகரிக்கப்பட்டுள்ளன.

## சங்கிலியை அறுத்துக்கொண்டு ஓட்டம்பிடித்தாராம்!

(மாவிட்டபுரம்

வைத்தியசாலை சென்று திரும்பிய பெண்ணின் கழுததிலிருந்த சங்கிலியைக் கிரிஸ் கத்தியைக் காட்டி சைக்கிளில் வந்த இளைஞன் கொள்ளையடித்தானும்.

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலைக்கு 2,3 நாட்கள் தொடர்ந்து மருந்தெடுக்கச் சென்ற ஏழாலையைச் சேர்ந்த பெண்ணொருவரை மறித்து அவர் கழுத்திலிருந்த மூன்றரைப் பவுண் நிறையுள்ள சங்கிலியை கிரிஸ் கத்தியைக் காட்டி சைக்கிளில் வந்த இளைஞன் ஒருவன் அறுத்துக் கொண்டு ஓடிவிட்டான்.

இதுகுறித்து ஆஸ்பத்திரிக்குச் செல்லும் பெண்கள் மத்தியில் பெரும்பீதி ஏற்பட்டுள்ளதால் புனித இயக்கங்கள் இவ் விடயத்தில் தலையிட்டு உதவ வேண்டும் என்று இயக்கங்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

## மரண அறிவித்தல்

### மரியம்மா பஸ்தியாம்பிள்ளை

திருமதி மரியம்மா பஸ்தியாம்பிள்ளை காலமாகி விட்டார். இவர் காலஞ்சென்ற நிக்கிளாப்பிள்ளை பஸ்தியம் பிள்ளையின் அன்பு மனைவியும்,மணி, பபா, துரை, பயஸ்,பீட்டர் ஆகியோரின் அன்புத்தாயாரும், ஞானப்பிரகாசம், இமனுவல், பிரேமா, இராஜேஸ், அருள் மளா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் ஞாயிறு (20-04-86) காலை 9 00 மணியளவில் 109 புகையிரத வீதி, யாழ்ப்பாணத்தில் இருந்து செஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இப்படிக்கு
பிள்ளைகள்.

C 1854

இப்பத்திரிகை ‘‘ஈழநாடு’’ லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு சித்திரை மாதம் 19-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka un er number B 1003/81 Eelana u P. O. Box 49, Telegiam, Eelanadu, Telephone, 22389, 84126.